




# சுதந்திரன்

SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது: 1947

வள்ளுவர் ஆண்டு 2006 ஆடி 25, ஷஃபான் 2 ( 0-8 75) ஞாயிறு புத்தகம் 29, இதழ் 2


# தமிழர் கூட்டணி இளைஞர் மீது பொலிசார் மீண்டும் 'வேட்டை'!

## சிறை மீண்டவர்கள் மறுபடியும் பழிவாங்கப்படுகின்றனரா?



தமிழர் கூட்டணி இளைஞர்கள்மீது சிங்கள ஏகாதிபத்தியத்தின் பொலீஸ் படை மீண்டும் தனது வேட்டையை கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது. திடீர்திடீரென்று தமிழர் கூட்டணி இளைஞர்கள் விசாரணைக்கென்று பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டு, பொலீஸ் நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்டு வருகின்றனர். இரண்டு, மூன்று ஆண்டுகளாக சிறைச்சாலையில் நீதிவிசாரணை ஏதுமின்றி சிறைவைக்கப்பட்டு அண்மையில் விடுதலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் பெரும்பாலோர் மீண்டும் இப்போது பொலீஸ் நிலையங்களிலும், றிமாண்ட் சிறைகளிலும் அடைக்கப்பட்டிருப்பது கண்டு அவர்களது பெற்றுரும் பொதுமக்களும் குமுறுகின்றனர்! இந்த இளைஞர்கள்மீது வீணாக வஞ்சம் தீர்க்கப்படுகிறதா என்கிற கேள்வியையும் அவர்கள் எழுப்புகின்றனர்!

தமிழ் இளைஞர் பேரவை அமைப்புச் செயலாளர் மாவை— சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், (சி.ரி.பி) மணியம், முத்துக்குமாரசுவாமி, புஷ்பராசா ஆகியோருட்பட சிறைமீண்ட தமிழ் இளைஞர்கள் பெரும்பான்மையோர் இப்போது யாழ் பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர்.

தமிழர் கூட்டணி இளைஞர்களை இவ்வாறு மீண்டும் பொலிசார் துன்புறுத்த முனைந்திருக்கும் செயலானது தமிழ்ப் பொதுமக்களின் விரக்தியையும் வெறுப்பையும் அரசின்பால் திருப்பி வருகிறது.

தமிழர் கூட்டணியின் இளைஞர் அமைப்பான தமிழ் இளைஞர் பேரவை தன்னுடைய அறவழியிலான அரசியல் நடவடிக்கைகளில் முன்னேறுவதை கொஞ்சக் காலத்துக்கு தடுத்து வைக்கும் முயற்சியா இது என்கிற கேள்வியே எங்கணும் பரவலாகக் கேட்கப்படுகிறது.

அறவழியில் இயங்கும் தமிழ் இளைஞர் பேரவைக்கு "பயங்கரவாதப் பட்டம்" சுமத்தும் முயற்சியில் ஆளுங்கட்சி ஆதரவுப் பத்திரிகைகள் சில திட்டமிட்டு இறங்கியிருக்கின்றன. தமிழர் கூட்டணிமீதும் இல்லாத பொல்லாத அபாண்டங்களையும் கட்டுக்கதைகளையும் சுமத்தி பொதுமக்கள் மத்தியில் ஒரு கூடாத அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவு ஏடுகள் சில திட்டமிட்டு முயன்றுவருகின்றன. 'அத்த' என்ற கம்யூனிஸ்ட் கட்சியின் சிங்கள நாளேடு தனது அண்மைய ஆசிரியத் தலையங்கம் ஒன்றில் தமிழர் கூட்டணிமீது சேற்றைவாரி இறைத்து அபாண்டமான பழிகளை கூட்டணி மீது சுமத்தியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

# காவடி எடுக்கவும் காசி ஆனந்தனுக்கு தடை!

அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத் தீர்த்தத்திருவிழாவின் போது காவடி எடுக்கவும் விடாமல் கவிஞர் காசி ஆனந்தனுக்கு தடை போட்டுள்ளது சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம்.

இந்து மதத்தைச் சேர்ந்தவரான கவிஞர் காசி ஆனந்தன் தமது நேர்த்திக்கடன் ஒன்றை நிறைவேற்றுவதற்காக அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் இம்மாதம் 7ம் திகதி காவடி எடுக்கவிருந்தார். ஆனால் அவரது மத அனுஷ்டான உரிமையை கூட அவர் உபயோகிக்க விடாமல் தடை செய்து விட்டது பௌத்த ஏகாதிபத்தியம்.

கவிஞர் தன்னுடைய காவடி நேர்த்திக்கடனை செலுத்த முடியாதவாறு கடந்த ஞாயிறன்று (3-8-75) மட்டக்களப்பில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டு றிமாண்ட் சிறையில் இப்போது வைக்கப்பட்டுள்ளார். 11-8-75 வரை றிமாண்டில் அவரை வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கோவில் நேர்த்திக்கடனை செலுத்துவதற்காகவாவது அவரை விடுதலை செய்யவேண்டுமென்று நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட மனுவும் நிராகரிக்கப்பட்டு விட்டது.

கவிஞர் காசி ஆனந்தன் இப்போது விசாரணைக்காக கொழும்புக்கு கொண்வரப்பட்டிருப்பதாக கடைசியாக கிடைத்த செய்தி கூறுகிறது.

—5-ம் பக்கம் பார்க்க

### யாழ் மாநகரசபை கலைப்பு!

யாழ் மாநகரசபை கலைக்கப்பட்டுவிட்டது. யாழ். மாநகரசபையின் ஆணையாளர் வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறர்!

## துரையப்பாவைப் பற்றி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

"Srimavo loses main link with Jaffna Tamils — யாழ்ப்பாணத்தமிழர்களுடன் உள்ள பிரதான இணைப்பை சிறிமாவோ இழந்தார்!" — எனும் தலைப்புடன் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு துரையப்பாவின் அகால மரணம் குறித்து செய்திவெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் திரு. துரையப்பாவைப் பற்றி அது பின்வருமாறு எழுதியுள்ளது:-

"திருமதி பண்டாரநாயகாவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் துடிப்பான உறுப்பினர் திரு. துரையப்பா யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் பிரதமர் சென்றிருந்த போது, பிரதமரை ஆதரித்து கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தியவர் அவர்.

"திருமதி. பண்டாரநாயகாவின் கட்சியில் சேர்ந்ததன் மூலம்—யாழ்ப்பாணத்தின் பொதுசன அபிப்பிராயத்துக்கு விரோதமாக அவர் செயற்பட்டார். தமிழ் மக்களின் மொழி மற்றும் உரிமைப் போராட்டங்களுக்கு திரு. துரையப்பாவை ஒரு தடைக்கல் என்றுகூட சில அரசியற்கட்சிகள் கருதிவந்தன.

"அரசாங்கத்துக்கும் தமிழ் மக்களுக்குமிடையே உறவை ஏற்படுத்துவதற்கு ஆளும் ஐக்கிய முன்னணி துரையப்பாவை பயன்படுத்திவந்தது"

—இவ்வாறு 29-7-75 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# 1978-ம் ஆண்டுக்கிடையில் 'தமிழ்ஈழம்' உருவாகும்!

## 1854-ம் ஆண்டில் பிறந்த செம்பியனூர் சின்னத்தம்பிப் புலவரின் தீர்க்கதரிசனம்!

முன்னே குளக்கோட்டன்
மூட்டும் திருப்பணியை

பின்னே பறங்கி
பிடிப்பானேல்-மன்னுகேள்

பூனைக்கண் செங்கண்
புகைக்கண்ணன் போயினபின்
மான்நேர் வடுகாய் வரும்.

மேலே கூறிய வெண்பா திருகோணமலை பிறடரிக் கோட்டை முன்றலில் வீழ்ந்து கிடக்கும் கல்லில் எழுதிய வெண்பா.

காலங்கடந்து விட்டாலும் அதிற்கண்ட கருத்துச்செறிவுகள் ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்களை கவர்ந்திழுக்காமலிருக்க முடியாது!

இந்த வெண்பாவின் இறுதியடியின்படி:-

மான்நேர் வடுகாய் வரும்:- என்பதனுல்—

மான்போன்ற விழிகளையுடைய பெண் நேரடியாக ஆட்சிப்பீடத்திலமர்ந்த போது; எதிர்த்தாக்கமுள்ள ஒரு இனமான (வடுகர்—தமிழர்) தமிழர் தமக்கென ஓர் அரசியலை நிர்ணயிப்பது உறுதியான முடிபாகும்.

இந்த வெண்பா எப்போது எவரால் எழுதப்பட்டதென்பதை திட்டவட்டமாக யாராலுங் கூற முடியாது. ஆனுல் இதோ:-

மூன்றிலே தவழ்ந்து
மூன்றிலே பிறந்து

மூன்று மப்பொருளு ருவானுய்
மூன்றிலே தவழ்ந்து மூன்றிலே
உயர்ந்து

மூன்ருெடு மூன்றுமவ்
உருவாய்
மூன்றிலே கண்ட மூன்று
மப்புவியில்

மூன்றுமம் மூன்ருெடு மூன்ருய்
மூன்றிலே வந்த மூதறிப்
பெரியோய்
மூன்று பத்தொன்றுட னுகும்.

இக்கலிப்பாவின் இறுதியடியான மூன்று பத்தொன்றுடனுகும் என்றகருத்துப்படி (3×10+1=31) முப்பத்தொரு வருடங்கள் முடியுமுன்பு இந்த நாட்டிலே தமிழன் தனக்கான ஓர் ஆட்சியை நிறுவுவது தவிர்க்கமுடியாததொன்று.

இந்தப்பாட்டு இன்று நேற்றுப் பாடப்பட்டதல்ல. 1854ம் ஆண்டு செம்பியன்பற்று கிராமத்தில் பிறந்த செம்பியனுர் சின்னத்தம்பி புலவரால் இயற்றப்பட்டது, அவர் தமது 65 வயதில் (14-10-1929ம் ஆண்டு) மரணமானுர்.

இந்தச் சின்னத்தம்பி புலவர் கி. பி. 6ம் நூற்ருண்டு இறுதியில் சோழப் பேரரசின் வாரிசாக விளங்கிய 'செம்பியன்' என்ற அரசனின் வாரிசு. "செம்பியன் பற்று" என்ற இடத்தை இராசதானியாக கொண்டிருந்தான் செம்பியன். அதே நேரம் அவனது ஆட்சிக்காலத்தில் பொலனறுவை மாவட்டம் இவனது ஆட்சியின் கீழிருந்தமை சரித்திர ஆதாரம்.

"இந்த "செம்பியன்" அரசனின் 31வது வாரிசான செம்பியனுர் சின்னத்தம்பி புலவர் இவ்வாறு ஓர் பாட்டை இயற்றி ஏட்டில் பொறித்தால் உலகமே ஆச்சரியப்படவேண்டும். ஆனுல் அவரது பாட்டு குறித்த காலத்தில் நிறைவேறக் கூடிய சூழ்நிலை இன்று உருவாகியுள்ளதை யாரும் மறக்கமுடியாது.

எனவேதான் திருகோணமலை பிறடரிக் கோட்டை முகப்புக் கல்லில் பொறிக்கட்பட்ட வெண்பாவும், செம்பியனுர் சின்னத்தம்பி புலவர் பாடியதும் காலத்தரல் பிரிக்கப்பட்டிருந்த போதிலும் கருத்தால் ஒன்றுபட்டிருப்பது எதிர்காலத் தீர்க்கதரிசன வாக்காகும்.

செம்பியனுர் சின்னத்தம்பி புலவர் பாடிய பாட்டுக்கு விளக்கம் கீழே காணலாம்:-

மூன்றிலே பிறந்து:- லமூரியா, சிந்து, ஈழம் (பிறந்தது)

மூன்றிலே வளர்ந்து:-சேர, சோழ, பாண்டியர்.

மூன்றுமப் பொருளுருவானுய்:- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ் கணக்கு.

மூன்றிலே தவழ்ந்து:- வேங்கடம், ஆயிடை, தென்குமரி.

மூன்றிலே உயர்ந்து: அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்.

மூன்ருெரு மூன்றுமவ் உருவாம்:- மூன்ருெரு மூன்று= ஒன்பது.

ஒன்பது நவக்கிரகங்களையும் கட்டுப்படுத்தியதாகும்.

மூன்றிலே கண்ட; 'தமிழ்' என்ற மூன்று எழுத்தும்,

மூன்றுமப்புவியில்; "ஈழம்" என்ற மூன்றெழுத்தும் கூட்டில்.

மூன்று மூன்ருெடு மூன்ருய்; தமிழ், ஈழம், செல்வா.

மூன்றிலே வந்த; மூன்று எழுத்திலே வந்த,

மூதறிப் பெரியோய்: "செல்வா" (மூன்றெழுத்தாலான)

மூன்றுபத்தொன்றுடனுகும்:- 1947-02-04ந் திகதி இலங்கை சுதந்திர நாடானது. அன்று தொடக்கம் இன்றுவரை தமிழன் நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டுவாழ்வது மறக்கமுடியாத உண்மை.

ஆனுல் 1947ம் ஆண்டு தொடக்கம் 1978ம் ஆண்டுக்கிடையில் 31 ஆண்டுகளென்ருல் 1978-ம் ஆண்டில் தமிழன் தமிழனுக்கான ஓர் அரசாங்கத்தை நிறுவுவது உண்மை.

இச்சம்பவம் சந்தர்ப்ப சூழ்நிலையால் தவிர்க்கப்பட்டோ அல்லது பின்போடப்பட்டாலோ இந்த ஈழ நாட்டிலே தமிழன் இருந்தானு என்ற கேள்விக்கு விடை காண முடியாது.

காலத்திற்குக் காலம் ஒரு நாட்டில் தீர்க்கதரிசிகளும், அரசியல் ஞானிகளும் தோன்றுவது இயல்பு.

இதே நேரம் தமிழ் இனத்தின் இக்கட்டான சந்தர்ப்பத்தில் கடந்த கால பெரியார்களின் சிந்தனைகளை நாம் தட்டிக்களிக்கமுடியாது.

எனவேதான் 1978ம் ஆண்டில் ஈழத்தமிழினத்தின் விடிவுகாலம் ஒன்று ஒரு நாளேற்படுவது உறுதியான முடிபு.

—செம்பியன் சி.வி.—பளை.

## இந்து மாமன்றக் கட்டடம் கொழும்பில் வேண்டாம்! தமிழ் ஈழத்தில் நிறுவுங்கள்!

### செயலாளருக்கு வேண்டுகோள்!

அகில இலங்கை இந்து மாமன்றத்தினர் கொழும்பில் அமைக்கப்போகும் மாடிக்கட்டடத்தை கொழும்பில் அமைக்காது திருக்கோணமலையிலோ வவுனியாவிலோ திருக்கேதீஸ்வரத்திலோ அமைக்குமாறு புங்குடுதீவு இளந் தமிழர் மன்றத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் இந்து மாமன்றத்தைக் கேட்டுள்ளார்.

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றக் கழகக் கட்டடத்தை அரசு சுவீகரித்த பின்பும் தமிழர் தாபனமொன்று கொழும்பில் கட்டடம் கட்டுவதில் அர்த்தமில்லையென்றும், தமிழர்கள் தங்கள் நாட்டில் தனியரசமைக்க வேண்டுமென்று பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள் முடிவெடுத்துள்ள இன்றைய காலகட்டத்தில் சிங்களப் பிரதேசமான கொழும்பில் இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் கட்டடமமைப்பது நன்றல்லவென்றும் கொழும்பிலே வாழுகின்ற சைவர்களுக்கு இங்குள்ள ஆலயங்கள் மூலமே சமய நெறியை ஊட்டமுடியுமென்றும் இந்து மாமன்றம் போன்ற தாபனங்களின் சேவை அடிமட்டத்தில் இருந்து அல்லலுறும் ஏழைத் தமிழ்ப் பாட்டாளி மக்களுக்குப் பயனளிக்க வேண்டுமாயின் தமிழ்ப் பிரதேசத்திலேயே அதன் கட்டடம் அமைந்து சேவையாற்ற வேண்டுமென்றும் தமிழரின் மதங்கள் தழைத்தோங்க வேண்டுமாயின் தமிழ்ப் பிரதேசங்கள் பாதுகாக்கப்

—7-ம் பக்கம் பார்க்க

## தமிழ்க் கத்தோலிக்கர்களுக்கு தனியொரு தலைமைப்பீடம் வேண்டும்

இலங்கைத் தமிழ்க் கத்தோலிக்க மக்களே விழித்தெழுங்கள். இலங்கைத் தமிழ்க் கத்தோலிக்கர் எல்லாரும் பிரிந்து சென்று வேறு ஒரு தலைவரை தமிழ்க் கததோலிக்கருக்கு இன்று தெரிந்து கொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டது.

இலங்கையிலே கூடுதலாக உள்ளது இரண்டு இன மக்கள். இந்த இரண்டு இன மக்களையும் ஒன்றிணைக்கக் கூடிய ஒற்றுமையான பாகுபாடற்ற சமயம் ரூமான் கத்தோலிக்க சமயமே தான். இலங்கையில் இந்த ரூமான் கத்தோலிக்க சமயத்திற்குத் தலைவராக, இரண்டு இனத்திற்கு ஒரு மதத்திற்குத் தலைவராக உள்ள வணக்கத்துக்குரிய தோமஸ்கூறே ஆண்டகையும் நீதி தவறுகிருர் என்ருல், தன்னுடைய மொழி பேசும் இனத்தின் பக்கம் சார்ந்து நிற்கிருரென்ருல், மனுமக்களுடைய பாவத்திற்காகத் தன்னுடைய உயிரையே பலியாக ஈந்த யேசுவுடைய திருச்சபைக்கு தலைவராக இருக்க வணக்கத்துக்குரிய தோமஸ் கூறே ஆண்டகை மூற்றிலும் தகுதியற்றவர் என்பதே அதன் பொருள்.

அதுவும் இலங்கை வாழ் தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்குத் தான் தலைவர் இல்லை என்பதைச் சொல்லாமல் தனது செய்கையிலேயே செய்துகாட்டிவிட்டாரே! அவர் நீதியின் நிமித்தம் கட்டளை இட்டால் எந்தக்காரியம் நடைபெருது? தமிழ்க் கத்தோலிக்க சகோதரரே சற்றுச் சிந்தியுங்கள். கருதினுல் ஆண்டகை அவர்களே மூடுவித்த கொழும்பு முகத்துவாரம் கோவிலை ஏன் திறந்தார்? அப்படிக் கோவிலை மூடும்போது கத்தோலிக்க தலைமைப்பீடம் சொன்ன வாக்கு கோவிலைத் திறந்தபோது காப்பாற்றப்பட்டதா?

முன்பு லத்தீன் பாஷையிலே குருமார் மக்களுக்குப் புறமுதுகு காட்டிக்கொண்டு பலிபூசை ஒப்புக்கொடுத்த நேரத்திலல்லவா தன்னுடைய இனத்திற்காக மொழிக்காககருதினுல் ஆண்டகை பாடுபட்டிருக்கவேண்டும். இப்பொழுது இன்னுமொரு மக்களுடைய மொழிக்கு விரோதமாக அவர் இருப்பதன் மர்மம் என்ன?

முதலாவது—ஆபேல் தன்னுடைய மந்தையில் திறமையான ஆடுகளைத் தேவனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார். இரண்டாவது — தேவனுடைய குரலுக்குச் செவிகொடுத்து ஆபிரகாம் தன்னுடைய ஒரே குமாரனைப் பலிகொடுக்கத் துணிந்தார். மூன்ருவது— மனுமக்களுடைய பாவங்களைப் போக்க எல்லாம் வல்ல யேசு பிரான் தன்னுடைய உயிரை பலியாகக்கொடுத்தார். நான்காவது-இதேபலியைகோதுமை அப்பத்தினதும் திராட்சை இரசத்தின் மூலமும் இரத்தம் சிந்தாதவிதமாக குருவின் கையால் எட்டுத் திக்கிலும் பூசைப்பலியாக ஒப்புக்கொடுக்கிருர்கள்.

ஆனுல் இலங்கையில் உள்ள கத்தோலிக்கத் தலைமைப்பீடம், இலங்கை வாழ் தமிழ் கத்தோலிக்கருடைய தமிழ்மொழியையே பலியாக ஒப்புக்கொடுக்கிருர்கள். இப்படி இலங்கையில் உள்ள கத்தோலிக்கத் தலைமைப் பீடம் தாங்கள் ஒப்புக்கொடுக்கும் பலிக்கு தமிழ்மொழி போதாமல் போய்விடுமோ என்ற [illegible] கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு முன்பாக இருக்கும், கத்தோலிக்க சமூகசேவை நிலையத்திற்கு வைக்கவேண்டிய தமிழ் மொழியையும் வைக்காமல் மறைமுகமாகப் பாதுகாத்து வைத்திருக்கிருர்கள். ஏனென்ருல் தாங்கள் ஒப்புக்கொடுக்கும் பலிப்பொருள் தமிழ் மொழியல்லவா?

இவையெல்லாவற்றின் மூலமும் மறைமுகமாக வணக்கத்துக்குரிய தோமஸ் கூறே ஆண்டகை அவர்கள் தான் தமிழ்க் கத்தோலிக்கருக்குத் தலைவர் இல்லை என்று சொல்லாமல் சொல்லிக்காட்டியுள்ளார். ஆகையினுல் தமிழ்க் கத்தோலிக்கருக்கு ஒரு தலைவரைத் தேர்ந்து எடுக்கும் பாதையை நோக்கி தமிழ் கத்தோலிக்க மக்கள் வீறு நடை போடுவோம்.

மனுமக்களுக்காகத் தன்னுயிரைக் கொடுத்த யேசுவின் பலி இன்று அகில உலகமும் பூசைப் பலியாக ஒப்புக்கொடுக்கப்படுவது போன்று இலங்கையில் உள்ள கத்தோலிக்க தலைமைப்பீடம் செலுத்தும் பலியின் பலிப்பொருளாகிய தமிழ்மொழி அகில உலகமும் பரவட்டும்.

பி. வி. அந்தோனிப்பிள்ளை
மத்தியபூமி, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ நாட்டை உருவாக்கும் சக்தி எது?

இலங்கையில், இருமொழிகளைப்பேசும் இரு இன மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஒருவரை மற்றொருவர் மதிக்கவும், அன்பு செலுத்தவும், உரிமை பாராட்டவும் வேண்டுமானால், மற்றவர்களுக்கு விட்டுக்கொடுத்து நடக்கவும் பழகிக்கொள்வது இன்றியமையாததாகும். இவ்விடயத்தில் இலங்கையில் வாழும் சிங்கள மக்கள் என்றாலும் சரி, அவர்களை வழி நடத்தும் அரசியல்வாதிகள் என்றாலும் சரி உண்மையை ஏற்றுக்கொள்ள தயாரில்லாமல் இருக்கிறார்கள். தெற்கே தொடர்ந்து தாங்களே அரசியலை நடத்தவேண்டுமென்ற பேரவா அவர்களை இன்னமும் விட்டு நீங்கவில்லை. அயலவனை நேசித்து அவனை மதித்து நடப்பதற்கு அவர்கள் தயாரில்லாதிருக்கும்போது, அவர்கள் தமிழர்களைப் பார்த்து வகுப்புவாதிகள் என்று கூக்குரல் இடுவதால் இந்த நாட்டுப் பிரச்சினைகள் தீர்ந்து போகாமல் வளர்ந்து கொண்டே வருகிறது.

தமிழ்ப் பகுதிகளுக்கு முன்னர் அடிக்கடி படையெடுத்து வந்த அமைச்சர்கள் காங்கேசன்துறைத்தேர்தலின் பின்பு வருவது குறைந்திருக்கிறது. எனினும் வரும் அமைச்சர்கள் அவர்களுடைய சொற்பொழிவுகள் தெற்கே பிரசுரிக்கப்பட வேண்டுமென்றும், அவர்களது வால்பிடிப்போர்களினது நெஞ்சங்கள் நிறைந்து அமைச்சர்களை வாயாரப் புகழ வேண்டுமென்றும் நினைத்து, அவர்கள் வாயிலிருந்து வகுப்புவாதிகள் என்ற பட்டத்தை தமிழர்களின் அரசியல் தலைமைப் பீடமான "தமிழ் கூட்டணியையும் திட்டித்தீர்த்து வருகிறார்கள். இலங்கையிலிருந்து வகுப்புவாதம் மறைந்து ஒழிந்துவிடாதிருக்க அமைச்சர்கள் கடைப்பிடித்து வரும் கபட நாடகத்தை தமிழ் மக்கள் அறியாமலில்லை.

## சிங்களம் மட்டும் சட்டத்தைக்கொண்டு வந்தவர்கள் யார்

தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து இருந்த நேரத்தில் இந்த நாட்டில் வகுப்பு வாதம் இருந்ததா? இந்த நாட்டின் பாராளுமன்றத்திலிருந்து அந்தச் சட்டத்தை அழித்து, சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவந்த போது, தமிழர்களுக்கு எதிராக பச்சை வகுப்புவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டவர்கள் யார்? தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்புகளைக்கூட சிறிதும் இலட்சியம் செய்யாது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கே வேட்டு வைத்து சிங்களமொழியை மட்டும் ஆட்சிமொழி என்றாக்கியவர்கள் யார்? தமிழர்களை மரமேறிகளாகவும், சிங்கள மக்களின் செல்வங்களை அபகரிக்கும் கொள்ளையர்களாகவும், அரசபோக வாழ்விலமர்ந்து சுலபமாகச் சம்பாதித்துக் கொள்வதாகவும், சிங்கள மக்கள் மத்தியில் அபாண்டமான பொய்களைச்சொல்லி வகுப்புவாதத்தின் சொந்தப்பிள்ளைகளாக, ஆட்சியைப் பிடித்த அம்மையாரும், அவரது கணவனும், அவர்களின் வாரிசுகளும், சிஷ்சியர்களுமே இந்த நாட்டில் பச்சை வகுப்புவாதிகளாவர்.

## தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றப்படுகிறார்கள்

• வடக்கே தமிழர்கள் ஆட்சி செலுத்துவதால் தன்னால் நிமிர்ந்து படுக்கவே முடியவில்லை என்றுசொன்ன துட்டகைமுனுவைச் சாட்சிக்கு வைத்துக்கொண்டு டி. எஸ். செனநாயக்கா காலம் முதல் இன்றைய சிறிமா ஆட்சிவரை சிங்களக் குடியேற்றம் தமிழ் பகுதிகளில் நிறுத்தப்படுகிறதா? இல்லவே இல்லை. இலங்கையில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களுக்கு வடகிழக்கு மாகாணத்துக்கு வெளியே ஒரு குடியேற்றத்திட்டமும் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லையே! இந்நிலையில், திருமலையில் சிறிமாபுர, பேசாலையில் அனுராபுர, யாழ்ப்பாணத்தில் அமரசேகரபுர. கிழக்கு மாகாணத்தில் நீர்ப்பாசனப்பகுதிகள் நிறைந்த பகுதிகளிலெல்லாம் சிங்களவர்கள் குடியேற்றப்படுகிறார்கள். சிங்கள மக்கள் தாமாகவே வந்து [illegible] வதை தமிழர்கள் எதிர்க்கவில்லை. குடியேற்றப்படுவதையே எதிர்க்கிறார்கள். ஆட்சியை அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு இந்தச் சிங்கள வகுப்பு வாதிகள் சிங்கள மக்களைக் குடியேற்றுவதை எந்த மானமுள்ள தமிழனும் ஏற்றுக்கொள்வானா? எவனுமேயில்லை. எங்கள் பூமியில் குடியேற்றவேண்டாமென எமது தலைவர்கள் சொன்னால் அவர்களால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார்கள். இதற்கும் காலம் பதில் சொல்லியே ஆகும்.

## அரசியல் சட்டம்

மக்களுக்காகவே சட்டங்கள் ஆக்கப்படுகின்றன. ஆனால் இலங்கையில் தமிழர்களை அழிப்பதற்காகவே சட்டங்கள் தீட்டப்படுகின்றன. தமிழர்களைக் காலக்கிரமத்தில் இச்சட்டங்களைக் கொண்டே அழித்துவிடலாம் அல்லது சிங்களவர்களாக மாற்றிவிடலாம் என அவர்கள் நம்புகிறார்கள். அதற்கு உடந்தையாக சில தமிழர்களும் தங்களை மாற்றி வருகிறார்கள். இதை அவதானிக்கும் அமைச்சர்கள் தங்களின் சட்டங்களும் திட்டங்களும் வெற்றிபெறுமென எண்ணுகிறார்கள். தமிழ்பேசும் மக்களை இந்த நாட்டில் ஐக்கிய முன்னணி அரசு ஆளவில்லை. ஆட்சியினரின் பொலிஸ், இராணுவம் ஆட்சிபுரிவதை எல்லாத் தமிழர்களும் அறிவார்கள். தமிழர்களின் பிரதேசமான வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் இல்லை. தேசிய பேரவையில் பொலிஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடு பதியப்படும் என்றார்கள். பொலிஸ் நிலையங்களில் சிங்களத்தில் புரியாதமொழியில் முறைப்பாடுகள் பதியப்படுகின்றன. தமிழில் எழுதும் கடிதங்களுக்குப் பதில் சிங்களத்தில் வருகிறது. தமிழர்களுடைய வியாபாரங்கள், கைத்தொழில்கள், பறிக்கப்பட்டு கூட்டுத்தாபனமாக்கப்பட்டு அங்கும் சிங்களமொழி விதைக்கப்படுகிறது. அரக்கத்தனமாக தமிழ் குழந்தைகள்போதனாமொழி "பெற்றோர் விரும்பிய மொழி" என்ற அடிப்படையில் சிங்களமொழி திணிக்கப்படுகிறது. கலாச்சார அமைச்சர் வடக்கே "பன்சாலை" கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கிறார். நீர்ப்பாசன அமைச்சர் தமிழர்களை பௌத்த மதத்தில் சேருமாறு அழைக்கிறார். இப்படியாக பச்சையாக சிங்கள வகுப்புவாதத்தை திணிப்பவர்கள் அமைச்சர்களும் அவர்களுக்கு உடந்தையாக அரசியல் சட்டமுமேயாகும்.

## தமிழ்மொழிக்கு அரசியல் யாப்பில் இடம்

தெற்கே வகுப்பு வாதிகள் இல்லை. அழித்துவிட்டோம். வடக்கே வகுப்புவாதிகளை அழித்து வருகிறோம், தமிழர் கூட்டணியை) அவர்களிடமிருந்து வகுப்புவாதம் அழிந்தது, அரசியல் சட் [illegible] என்று சில அமைச்சர்கள் தமிழ் பகுதிகளில் முணுமுணுக்கத் தொடங்கியுள்ளார்கள். தமிழர்களுக்கு உரிமை கொடுக்கவேண்டுமென ஒரு காலத்தில்கோரிய கம்யூனிஸ்ட் கட்சியையும் சமசமாஜக் கட்சியையும் மொழிக் கொள்கையில் விழுங்கி ஏப்பம் விட்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சி இப்போது அரசியல் லாபம் கருதி ஏதேதோ பேசுகிறது. தெற்கே தமிழ் பற்றி எவருமே எந்தச் சிங்கள மக்களுமே பேசாது சிங்களம் பற்றிப்பேசுமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அவர்களை ஆட்டிப்படைக்கிறது, ஏற்க வைத்திருக்கிறது. தனிச் சிங்களத்துக்கு அவர்களும் அடிமையாகிவிட்டார்கள்.

**முத்து - சுப்பிரமணியம்**

## தமிழ் பிரதேசத்தின் அபிவிருத்தி

பொருளாதாரம் பற்றிப் பேசுகின்ற, அவர்களால் நடத்தப்படுகின்ற சிங்கள ஆட்சியினரால் தமிழ் பகுதிகள் அபிவிருத்திசெய்யப்படுகின்றனவா? அதுவும் இல்லையே! மாவட்ட அடிப்படையில் ஒதுக்கப்படும் நிதி நியாயமான அளவு ஒதுக்கப்படவில்லை. (இதைப் பற்றி கவலூர்ப் பிரதிநிதி அண்மையில் எழுதியிருந்தார்) உத்தியோகம் பார்க்கும் அரச கூட்டுத்தாபன ஊழியர்களைச் சிங்களம் படிக்குமாறும், அல்லது உத்தியோகத்தை விட்டுவெளியேறுமாறும் கேட்கப்படுகிறார்கள். சாதாரண காவலாளி, சேவகன் ஆகியோரையும் சிங்களம் படி என்கிறார்கள்; வடக்கே வருகின்ற அமைச்சர்களைப் பேட்டி காணும் தொழிற்சங்கங்களுக்கு நோகாமல் பதில் சொல்ல அவர்கள் பழகிவிட்டார்கள். அவர்கள் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் இவைதான் "நீங்கள் கேட்கின்றமொழிக் கொள்கையை நான் ஏற்கிறேன் ஆனால் மந்திரி சபை ஏற்காது," இப்படியே தனித்தனி மந்திரிகள் சொல்லி ஏமாற்றுகிறார்கள்.

## தமிழ் நாடு வேண்டும்

குட்டக்குட்ட குனிபவன் மூடம் என தமிழ் பழமொழி இருக்கிறது. இரு ராஜ்சியப் பேச்சுக்கள் சுதந்திரககட்சி ஆரம்பித்தவர்களிடம் ஒத்துவராமல் இருக்கலாம். தந்தை செல்வா காங்கேசன்துறையில் தோல்வி அடைந்தாலும் தமிழுக்கு உரிமை தர அவர் முயலலாம் ஆனால் வகுப்புவாதம் செத்துமடியும் வரை தமிழர்கள் உயிரோடு, தன் மானத்தோடு வாழ முடியுமா? என்பதே கேள்வியாகும். வகுப்புவாதம் பேசி தங்களுக்குச் சாதகமாக அவர்கள் சட்டங்களை எழுதிவிட்டார்கள். மாற்ற, அல்லது திருத்த அவர்களுக்கு விருப்பமில்லை. தமிழர்களுக்குத் தேவையான சட்டங்களை நாமே எழுதுவோம். அவர்கள் எழுதிய சட்டங்கள் அவர்களுக்கு நியாயமானதாகத் தோன்றுகிறது. எனவே தந்தை செல்வாவின் காலத்திலேயே தமிழ் ஈழ நாட்டின் சட்டங்களை எழுதித் தனித் தமிழ் நாட்டை உருவாக்குவோம். சிங்கள வகுப்புவாதிகளின் வகுப்புவாதமே தமிழ் நாட்டை உருவாக்கும்.

தமிழ் நாடு தமிழருக்கே சொந்தம்.

---

## சோமசுந்தரர் விழா!

இலங்கைப் பல்கலைக் கழகத் கட்டுபெத்தை வளாகத் தமிழ்ச் சங்கத்திலே 24-7-75 வியாழக்கிழமையன்று சோமசுந்தரப் புலவர் தினம் வெகு சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. திரு. இ. மயூரநாதனின் தமிழ் வாழ்த்துப்பாடலுடன் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. சங்கத் தலைவர் திரு. க. பாலேந்திராவின் தலைமையுரையைத் தொடர்ந்து திரு. சண்முகானந்தகுமார் அவர்களும் தமிழ் ஏந்தல் திரு. ஈழவேந்தன் அவர்களும் சொற்பெருக்காற்றினார்கள். அடுத்துப் புலவரின் பாடல்கள் சிலவற்றை இசையுடன் கலந்து செல்விகள்செல்வராணி, புஷ்பாவதி லலிதாம்பாள், வசந்தி, உஷா, ஞானேஸ்வரி, லோகினி ஆகியோர் பாடினர்.

'தங்கத் தமிழ்' என்னுந் தலைப்பில் கவிஞர் இராஜமனோகரனின் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் இளங்கோ, மயூரநாதன், திருவள்ளுவர், சந்திரகாசன், சிவலோகநாதன், அருள்வதனி ஆகியோர் பங்கேற்றனர். மிகவும் உணர்ச்சியூட்டும் வகையில் இவ்வரங்கம் அமைந்திருந்தது. சங்கப்பொதுச் செயலாளர் திரு. கு. ஜெயக்குமாரின் நன்றியுரையுடன் விழா இனிதே முற்றுப்பெற்றது.

---

## வள்ளுவர் நினைவாக அஞ்சல் தலை வெளியிடுக!

காலத்தை வென்ற அரிய நீதிநூல் இலக்கியமாம் திருக்குறளை வையத்தார்க்கு ஈந்து, வையம் வாழ்வாங்கு வாழ வழி வகுத்த பேரறிஞர் திருவள்ளுவர் நினைவுக்குச் சிறப்பு அஞ்சல் தலை வெளியிடவேண்டுமென அரசினை வேண்டும் தீர்மானமொன்று இலங்கை அறிவு இயக்கம் 25-5-75 ஞாயிற்றுக் கிழமை நுவரெலியா புனித

—6-ம் பக்கம் பார்க்க

---

## உயிரையும் ஈவேன்!

முத்தமிழ் முரசொலிக்க
முடிமன்னர் சிரம்து திக்க
வித்தகப் பெருநலத்தால்
மேதினி அனைத்தும் போற்ற
புத்தெழிற் புகழ்பரப்பி
பொன்னர சோச்சி நின்ற
பத்தினிச் செல்வீ! ஞானப்
பைந் தமிழ் அரசி வாழ்க!

மைவரை இமயவெற்பும்
மறிகடற் குமரி யென்னும்
வையகப் பெருநிலத்தில்
வான் புகழ் சிறக்க நின்று
துய்ய நல்லறம் வளர்த்துத்
துலங்கிய தமிழே! இன்று
பொய்யர் தம் கையில் சிக்கிப்
பொலிவிழந் தழிதல் கண்டு.

என்னுளம் கொதிக்கு தம்மா!
எரிமலை போலப் பொங்கி
செந்நீரை வடித்து நெஞ்சில்
சினத் தீயை மூட்டு தம்மா!
மன்னர்தம் மடி தவழ்ந்து
வளர்ந்த பொற் செல்வீ! உன்றன்
உன்னதப் பெரு வாழ்வுக்கே
உயிரையும் ஈவேன் அம்மா!

(சந்தியூரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## இந்திரா என்ன செய்துவிட்டார்?

இந்தியத் துணைக் கண்டத்தையும் அகில உலகத்தையும் ஒரு கலக்குக்கலக்கிவிட்டிருக்கும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு எதிரான தேர்தல் ஆட்சேபனை வழக்குத் தீர்ப்பின் மீதான மேல் விசாரணையை இத் திங்கள் 12ம் திகதி இந்திய உச்சநீதிமன்றம் எடுத்துக் கொள்ளவிருக்கிறது.

இந்திராகாந்திக்கு எதிராக அலகாபாத் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதையடுத்து—இந்தியாவின் சிலபகுதிகளில் ஏற்பட்ட பதட்ட நிலையும் அதைத் தொடர்ந்து பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலையும், பத்திரிகை தணிக்கையும், எதிர்க்கட்சித் தலைவர்கள் (இந்திராவுக்கு எதிராக தேர்தல் வழக்கைத் தொடர்ந்திருந்த திரு. ராஜ் நாராயணன் உட்பட) கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டிருப்பதும் — வெளிநாடுகளின் பத்திரிகையாளர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதும்—அவசரகால நிலைமையை அகற்றி, மீண்டும் ஜனநாயக உரிமைகளை நிலை நாட்ட வேண்டுமெனத் தமிழ நாடு குரலெழுப்பியும் தீர்மானங்கள் நிறைவேற்றி வருவதும் நாம் அறிந்த விடயங்களே!

இந்திராவின் மேன் முறையீடு மீது இந்திய உச்ச மன்றம் நடத்தவிருக்கும் விசாரணையையும் அது தரவிருக்கும் தீர்ப்பையும் உலக முழுவதும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் இச்சமயத்தில்—அவசர அவசரமாக இந்திராகாந்தியார் எடுத்திருக்கும் சில நடவடிக்கைகள்—அவரது பதவியையும்அதிகாரத்தையும் பாதுகாப்பதற்ந வழிவகுத்திருப்பினும் நிச்சயம் அவருக்கு பெருமையளிப்பதாக இல்லை!

உலகுக்கே வழிகாட்டிய மாபெரும் ஜனநாயகத் தலைவர் ஜவகர்லால் நேரு அவர்களின் திருமகளா இப்படிச் செய்திருக்கிறுர் என்று ஒரு கணம் திகைத்துப் போகிறேம்!

ஆம்—தேர்தலில் குற்றங்கள் புரிந்தவரென வழக்கொன்றில் காணப்படும் ஒருவரை—அவரது பதவியிலிருந்து நீக்கும் அதிகாரத்தை நீதிமன்றங்களிடமிருந்து பறித்தெடுத்து—அதை தேர்தல் கமிஷனரிடமும் ஜனதிபதியிடமும் ஒப்படைக்கும் தேர்தல் சட்டத்திருத்தங்கள் இந்தியப் பாராளுமன்றத்தில்—எதிர்க் கட்சிகளின் பகிஷ்கரிப்புக்கு மத்தியில்—மிகவும் அவசரமாக நிறைவேற்றப் பட்டிருக்கின்றன!

இந்தச்சட்டம் 1971ம் ஆண்டிலிருந்து அதிகாரமுள்ளதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்திராவுக்கு எதிரான தேர்தல் தீர்ப்பின் மீதான மேன் முறையீடு அடுத்தவாரம் விசாரணைக்கெடுக்கப்படவிருக்கும் சூழ்நிலையில் அவரச அவசரமாக இப்படியொரு சட்டத் திருத்தம் இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியம்தான் என்ன?

இந்திய உச்சநீதிமன்றத்திலும் தனது வழக்குத் தோற்றுவிட்டால் என்னுவது என்று இந்திரா காந்தியாருக்கு உள்ளூர ஏற்பட்ட அச்சத்தின் விளைவுதானு இச்சட்டத்திருத்தம்?

இந்தியாவுக்கு இந்திராவின் தலைமை இன்று அத்தியாவசியமாக இருக்கலாம்; திடீரென தேர்தல் சட்டத்தை திருத்தியதற்கு இந்திராகாந்தியார் ஆயிரம் சமாதானங்கள் கூறலாம்! ஆயினும் இவையெல்லாம் முழுப் பூசினிக்காயை பிடி சோற்றில் மறைக்க முயலும் முயற்சியாகவே உலக மக்களால் கருதப்பட இடமிருக்கிறது.

பதவியையும், அதிகாரத்தையும் காப்பாற்றிக் கொள்ள நேருவின் மகளான இந்திராகாந்தி அம்மையார் சட்டத்தை தனக்கு சாதகமாக திருத்தி அமைத்துக்கொண்டார் என்கிற குற்றச்சாட்டுக்குள் அவர் அகப்பட்டுக்கொண்டு விட்டார்!

இந்தத் தீராத கறை—அழியாத வடு இந்திரா காந்தியாருக்கு என்றென்றைக்கும் இருந்து கொண்டிருக்கவேபோகிறது.

இந்திராகாந்தியம்மையார் தமது பதவியையும் அதிகாரத்தையும் இனிக்காப்பாற்றிக்கொள்ளக் கூடும். அவர் பதவியிலிருப்பதைப்பற்றி நமக்குக் கவலையில்லை! ஆனுல்—ஜனநாயகம் என்கிற புனிதமான தத்துவத்தை அதிகாரத்திலிருப்போர் தமக்கு வேண்டிய நேரங்களில் தமக்கு வேண்டியவாறு வளைத்துக்கொள்ளலாம் என்கிற புதிய சித்தாந்தத்தை அவர் இந்தியத் துணைக்கண்டத்தில் உருவாக்கிவிட்டாரே என்பது தான் நமது கவலையாகும்!

# காப்புறுதி நிறுவனத்தில் தமிழுக்கு இடமில்லை!

இந்நாட்டின் இன ஒற்றுமையை வளர்க்கவும் நாட்டின் அபிவிருத்தியை நோக்கியுமே பகிஷ்கரிப்பு நடாத்திய திருமலை எம். பி. திரு பா. நேமிநாதனின் இல்லத்துக்குச்சென்று தேனீர் அருந்தினேன் ... தென் பகுதியைப்பொறுத்தவரை நாம் இனவாதத்தை அடியோடு ஒழித்துக்கட்டியுள்ளோம்: ஆனுல் வடகிழக்கு மாகாணத்தில் இனவாதம் இன்னும் ஒழியவில்லை. இந்த அரசு தமிழ் மக்களுக்கு போதிய வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. சகல துறைகளிலும் நாம் தமிழர்களுக்கும் அவர்களின் மொழிக்கும் இயலுமான தேவைகளை அளித்துள்ளோம்.''

இவ்வாறு 'கொள்கை' பேசியிருப்பவர் வேறுயாருமல்ல வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின ஆவார் — (வீரகேசரி — 3-7-75); பேசிய இடம் இலங்கைக் காப்புறுதித் கூட்டுத்தாபனத்தின் திருகோணமலைக் கிளைக்கான புதிய கட்டடத்தை திறந்து வைத்த போது நடைபெற்ற விழா; யூன் 30-ம் திகதி நடைபெற்ற இவ்விழாவுடன் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் பற்றி, ''திருகோணமலை தமிழ் இளைஞர்பேரவையின் எதிர்புக் கண்டு இலங்கரத்தின கதிகலக்கம்! நேமிநாதனிடம் சரணுகதி!'' என்ற தலைப்பில் 6-7-75இல வெளிந்த 'சுதந்திரன்' இதழில் வெளிவந்தது. எனவே விழாநிகழ்ச்சிகளை விடுத்து அமைச்சரின் பேச்சு 'அந்தரங்க சுத்தி' யுடன் நிகழ்த்தப்பட்டதா? என்பதை மட்டும் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம, வெறும் அரசியல்வாதி என்ருல் புறக்கணித்துவிட்டுவிடலாம்; ஆனுல் பேசிஇருப்பவரோ ஓர் அமைச்சர், அதுவும் ஒரு சிரேஷ்ட அமைச்சராயிற்றே!

1974ம் ஆண்டில் காப்புறுதித்தொழிலைப்பெருக்கும் பொருட்டு கூடுதல் வியாபாரத்தைச்சேகரித்துக் கொடுக்கும், ஏஜெண்ட்எழுதுவினைஞர் சேவைக்கு மாருக்கும், அமைப்பாளர்களுக்கும் பணப்பரிசும், தங்கப் பதக்கமும், கேடயமும் வழங்குவதாக அமைச்சர் திரு. இலங்கரத்தினவின் ஆதிக்கத்தின் கீழ் இயங்கி வரும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது. இந்தப்போட்டியில் பரிசுபெற்றவர்களில் அரைவாசிப்பேர் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலையிலும் அமைந்துள்ள கிளைகளைச்சேர்ந்தவர்களாவர்; அவர்கள் தமிழர்கள் பரிசளிப்பு விழா கொழும்பு நவரங்க மண்டபத்தில் 4-7-75இல், அதாவது, இக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட உரையை அமைச்சர் நிகழ்த்திய மூன்றே மூன்று நாட்களின் பின் நடைபெற்றது.

வைபவம் ஆரம்பித்த நேரம் தொடக்கம் விழா முடியும்வரை ஒரு தமிழ் வார்த்தைதானும் அங்கு பேசப்படவில்லை. விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் சிங்கள மொழியிலேயே நடாத்தப்பட்டன; பரிசு பெற்றவர்களின் பெயர் பட்டியல் கூட சிங்களத்தில் மட்டுமே வாசிக்கப்பட்டது; விழாவுடன் சம்பந்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளில் சிங்களப் பாடல்களும், சிங்கள நடனங்களுமே இடம்பெற்றன.

விழா நடைபெற்றது — திரு. ரி. பி. இலங்கரத்தினவின் தலைமையில் என்பதனுல் அவரின் அங்கீகாரத்துடனேயே நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன — என்றுதானே கொள்ளவேண்டும்? ஆகவே அமைச்சர் திரு. இலங்கரத்தின இன ஒற்றுமையைத்தாம வளர்ப்பதாகக் கூறுவது எவ்வாறு பொருந்தும்? காப்புறதிக் கூட்டுத்தாபனத்தில் இலட்சக்கணக்கில் தம் பணத்தை முதலீடுசெய்திருக்கும் தமிழ் மக்கள் இதை உணர்ந்து கொள்ளவேண்டியது அவசியம் மட்டும் அல்ல; அவசர முங் கூட!

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கடந்த இரண்டொரு ஆண்டுகளாக இருநூறுக்கும் மேற்பட்ட ஊழியர்களைச் சேர்த்துள்ளது. இவர்களில் தமிழ் ஊழியர்கள் எத்தனை பேர்? பதில் பூஜ்ஜியம் தானும்! தமிழ்க் காப்புறுதியாளருடன் தமிழில் கடிதப்போக்குவரத்து வைத்துக்கொள்ள தமிழ் ஊழியர்கள் — வேண்டாமா? அப்படியானுல் தமிழ்க் காப்புறுதியாளர்களுக்கு 'சிங்களத்தில் மட்டு'மே பதில்கள் கிடைத்து வருகின்றன—என்றபுகாரில் உண்மை இருக்கத்தானே வேண்டும்? இது திரு. இலங்கரத்தினவுக்குத் தெரியாத ஒன்று? தெரியாமல் இருக்க நியாயமில்லை; ஏனெனில், கூட்டுத்தாபனத்தின் கொள்கை வகுக்கப்படுவது அவரின் அங்கிகாரத்துடன் தானே!

இலங்கைக் காப்புறுதித் கூட்டுத்தாபனத்துக்கும் அங்குள்ள மிகப்பெரும் தொழிற்சங்கமானஇலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்துக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையான 'சன்சோனி ஆணைக் குழு' அறிக்கையின் படி 1-1-1962ம் திகதிக்கு முன் தனியார் இன்சூரன்ஸ் கொம்பனிகளில் வேலை செய்து பின் கூட்டுத்தாபனத்தில் சேர்ந்தவர்கள் அரச சேவையில் உள்ள 'பழைய ஊழியர்கள்'போல — 'பழைய ஊழியர்கள்' ஆகக்கருதப்படுவர். இதன்படி, அவர்களுக்குச் சிங்கள மொழித்தேர்ச்சி அவசியமில்லை. ஆனுல், சிங்கள மொழித்தேர்ச்சியில்லாத காரணத்தினுல் சில தமிழ் ஊழியர்களுக்கு கூட்டுத்தாபன நிர்வாகம் சேவை நீடிப்பு வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது.

சமீபத்தில் கூட்டுத்தாபன நிர்வாகம் அனுப்பியுள்ள சுற்று நிருபம் ஒன்றில் சிங்களத் தேர்ச்சிப்பரீட்சைக்கு வகுப்புக்கள் நடத்தப்பட இருப்பதாகக் குறிப்பிட்டு உபகாரச்சம்பளம், சேவை கால நீடிப்பு, பதவி உயர்வு போன்றவற்றுக்கு சிங்கள மொழித்தேர்ச்சி அவசியம் என்று சுட்டிக்காட்டியுள்ளது. அதாவது 'சிங்களம் மட்டும்' தெரிந்த சிங்கள ஊழியர்களை ஒரு புறத்தில் தெரிவுசெய்து கொண்டு மறுபுறத்தில் சிங்களம் தெரியாத தமழ் ஊழியர்களுக்கு சேவைகால நீடிப்பு மறுக்கப்படுகிறது.

காப்புறுதிக் கூட்டுத்தாபனம், பதவி உயர்வு விஷயத்திலும் பாகுபாடு காட்டி வருவதாகஅறியப்படுகிறது. சமீபத்தில் உதவிக் கணக்காளர் சேவைக்கு பதவியுயர்வு மூலம் சிலரை நியமித்தது; இதில் இரண்டு மூன்று தமிழ ஊழியர்கள் உயர்தராதரம் பெற்றிருந்தும் அவர்களுக்குப் பதவியுயர்வுகிடைக்கவில்லையாம். தான் 'இடது சாரி லேபல்' ஒட்டியிருந்துங்கூட தனக்கு பதவியுயர்வு வழங்கப்படவில்லையே என்ற விரக்தியில் வடபகுதியைச்சேர்ந்த ஓர் ஊழியர் வேறு ஓர் இடத்தில் வேலை பார்த்துக் கொண்டு போய்விட்டாரம். மற்று மொருவர் நாட்டைவிட்டே போய்விட்டாராம். மேலும் காப்புறுதித்துறையில் மிக உயர்ந்த பட்டம் பெற்ற சில தமிழ் ஊழியர்களுக்கு பதவியுயர்வு மறுக்கப்பட்டு வருவதாகவும் காப்புறுதிப்பட்டம் எதுவும் பெருதவர்களுக்குக் கீழ்

—5-ம் பக்கம் பார்க்க.

## என். வி. என். மறைவு

தமிழ் நாட்டுக்கும், தமிழ்மொழிக்கும் தமிழினத்திற்குமாக கடந்த 30, 40 ஆண்டுகளாக சுறுசுறுப்புடன் ஓய்வு ஒழிச்சலின்றி பணியாற்றி வந்த அந்த ஒல்லியான உருவம் மறைந்துவிட்டது!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய மந்திரங்களைச் செபித்துக்கொண்டு தமிழகத்தின் நலத்துக்கு அயராது உழைத்து வந்த சுயமரியாதைச் சுடர் அணைந்து விட்டது!

ஆம், அமைச்சர் என். வி. நடராசன் அவர்களைத் தான் குறிப்பிடுகிறேம்!

அறிஞர் அண்ணுவின் அருமைத் தம்பியர்களில் ஒருவராக — தி. மு. க. தலைவர்களில் முக்கியமானவராக கலைஞர் கருணுநிதியின் வலதுகரமாக—விளங்கிய அவர் மீளாத்துயிலில் ஆழ்ந்துவிட்டார்!

இந்தி எதிர்ப்பு போராட்டங்களில் முன்னணிவகித்து சிறை சென்றவர் என். வி. என்.! கழகம் நடத்திய அத்தனை போராட்டங்களிலும் அவர் சிறை சென்றிருக்கிருர்!

அடக்கம், அமைதி, செயலாற்றல், சுறு சுறுப்பு, கட்டுப்பாடு,—அவரது சிறந்த குணுதிசயங்கள்!

என். வி. என். அவர்களின் பிரிவு தமிழகத்துக்கும்—திராவிட இயக்கத்துக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்!

என். வி. என். அவர்களின் பிரிவினுல் துயருறும் தி. மு. கழகத் தலைவர்களுக்கும், என் வி என். அவர்களது குடும்பத்தினருக்கும் ஈழம் வாழ் 35 இலட்சம் தமிழ் மக்களின் சார்பில் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேம்!

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியை தகர்த்தெறிய புதிய சதி!

## ஜனவேகக் கும்பலின் திட்டமிட்ட சூழ்ச்சி!

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தை பௌத்த சிங்கள இனவாதக் கும்பலான ஜனவேகத்திற்கு தாரைவார்த்துக் கொடுப்பதில் முன்னணிவகிப்பதாக சங்க உறுப்பினர்களால் குற்றம் சாட்டப்பட்டு வரும் அதன் தலைமைப் பீடம், தற்பொழுது மொழிவழித் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பான தமிழ் தொழில் சங்கக் கூட்டணியையும் துரோகிகள் பாசறையாக்க பகீரதப் பிரயத்தனம்மேற்கொண்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

ஜனவேகம் என்னும் அரசாங்க ஊதுகுழல் பத்திரிகையில் அண்மைக் காலமாக தொழில் சங்கக் கூட்டணியையும் அதன் தலைவர்களையும் சாடும் விதத்தில் பலப்பல செய்திகள் புனைந்துரைக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இச்செய்திகள் அனைத்தும் எழுதுவினைஞர் சங்கத்தின் தலைமைப்பணிமனையில் இருந்தே உருவாக்கப்படுவதாக நம்பிக்கையான வட்டாரங்கள் ஆதாரபூர்வமான முறையில் உறுதிப்படுத்துகின்றன.

மேற்படி நடவடிக்கைகளைத் தொடர்ந்து, தமிழ் தொழிற் சங்க கூட்டணியில் தற்பொழுது அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதிகளாக இருக்கும் பன்னிருவரையும் வாபஸ் பெறுவதாகவும் அதற்குப் பதிலாக புதிய பிரதிநிதிகள் பன்னிருவர் நியமிக்கப்படுவதாகவும் கடிதம் ஒன்றை தொழிற் சங்கங் கூட்டணியின் ஏனைய உறுப்புரிமைச் சங்கங்களுக்கு எழுதுவினைஞர் சங்கத் தலைமைப் பீடம் அனுப்பி வைத்துளளதாம்.

தற்பொழுதுபிரதிநிதித்துவம் வகிப்பவர்கள் அனைவரும் தமிழர் கூட்டணியின் ஆதரவாளர்கள்; தொண்டர்கள்; கூட்டணியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, பல ஆண்டுகளாகத் தனித்தனி இயக்கமாக இயங்கி வந்த மொழிவழித் தொழிற்சங்கங்கள் அனைத்தையும் ஒன்றுபடுத்தி ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த பெருமைக்கும் உரித்தானவர்கள். மொழிவழித் தொழிற் சங்க வரலாற்றில் இவர்களின் சாதனை புதிய வரலாற்றைப் படைத்திருந்தது யாரும் மறுக்க முடியாத ஒரு விடயமாகும்.

புதிய பிரதிநிதிகளை நியமிக்க வேண்டிய அவசியம் எழுதுவினைஞர் சங்கத்திற்கு ஏற்பட்டதா? என்பதும் சிந்திக்க வேண்டியதொன்று அது ஒரு புறமிருக்க, புதிய பிரதிநிதிகளை நியமிக்கும் பொழுது ஏற்கனவே இருக்கும் பிரதிநிதிகளுடன் ஒரு வார்த்தை தானும் பேசாது அத்தனை பேரையும் வாபஸ் பெற எண்ணியது எழுதுவிளைஞர் தலைமைப் பீடம் என்னும் மண்டூகத்திற்கு பண்பாடுஅறவேகிடையாது என்பதையல்லவா தெளிவாக்குகின்றது.

கறையான் புற்றெடுக்க பாம்பு குடிகொண்டது போல் புதிதாக நியமிக்க சிபார்சு செய்யப்பெற்ற பன்னிருவரும் யார்? யார்?? ஒரு சிலரைத் தவிர ஏனைய யாவும் கோடரிக்காம்புகள்! இவற்றில் ஞுள்ள நடராசா, சீதனப் பொன்னர், செலவுக்குக் காசு கேட்கும் கதிரவேலு, தமிழினத்தின் தலைமை ரௌடி, அங்கித்தி அலீஸ், ஆகியோரின் எடுபிடிகளும் அடங்குவராம்!

தொழிற் சங்கங்கள் சமுதாயத்தின் ஒரு உறுப்புக்கள். ஆகவே, அரசாங்க எழுதுவினைர் சங்கம் தமிழினத்தின் விடுதலை இயக்கத்துடன் சேர்ந்து முழு மூச்சுடன் பணியாற்ற வேண்டிய இக்கட்டான இச்சந்தர்ப்பத்தில் இனத்தை மாற்றானுக்குகாட்டிக்கொடுக்கும் பணியை சிரமேற் கொண்டிருப்பதாக சொல்லப்படுவதை நினைக்கும் பொழுது எந்த ஒரு தன்மானமுள்ள தமிழனும் தாங்கிக்கொள்ள மாட்டான்.

கேவலம்! சுமார் மூவாயிரம் உறுப்பினர் உள்ள இச்சங்கம்—இனத்தை காட்டிக்கொடுத்து வாழும் ஒரு தலைமையில் இயங்குவதா என்று குமுறுகின்றனர் சங்கத்தின் பழம் பெரும் உறுப்பினர்கள்!

—காளமேகம்.

## கத்தோலிக்க தமிழ்க் கழகம் கொழும்பில் அங்குரார்ப்பணம்!

கொழும்பில் தமிழ்க் கத்தோலிக்கர்களின் நலன்களை கவனிப்பதற்கென கத்தோலிக்க தமிழ்க் கழகம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அமைப்பு அண்மையில் மோடி மண்டபத்தில் திரு. ஏ. கிறிஸ்தோபர் தலைமையில் நடைபெற்ற தமிழ் கத்தோலிக்கர்களின் கூட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. அதன் நிருவாகிகள் வருமாறு!

தலைவர்: திரு. எம். ஜி. வென்சஸ்லாஸ், உப தலைவர்கள்: திரு. ஏ. ஈ. பிரான்சிஸ் பெர்ணண்டோ ஜே. பி. திரு. ஏ. கிறிஸ்தோப்பர். இணைச் செயலாளர்கள்: திரு. பொஸ்கோ பெர்ணண்டோ, திரு. லெஸ்லி பஸ்தியாம் பிள்ளை. தனாதிகாரி திரு. மத்தாயஸ்.

அத்துடன் செயற்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: திருவாளர்கள்: எஸ். ராஜரத்தினம், வின்சன்ட் பெர்ணண்டோ, ஏ. பெர்ணண்டோ, ஜோன் ஒவ் ஆர்க் கொஸ்தா, ஜெயரத்தினம் பெர்ணண்டோ, செல்வி அமல் பெர்ணண்டோ, திருவாளர்கள்: துரைராஜா, எஸ். டிவோட்டா, எஸ். பி. டேவிட் ராஜு பஸ்தியன், பி. ஜே. அலோசியஸ், திருமதி கபிரியேல்பிள்ளை, திருவாளர்கள்: அருளானந்தம், ஜே எம். தங்கராஜா, பெனி கோமஸ், ஜே கிறிஸ்தோப்பர், ஜே. தேவராஜா, எல். அனடனி, ஜோபல்தானே, பைரன் அல்மேரா, ராஜமணி.

# அ. எ. வி. சங்கத் தலைமைக்கு எதிராக நடந்த அமளிதுமளி!

அரசாங்க எழுதுவினைஞர் சங்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆண்டுக் கூட்டத்தில் கலந்து கொள்ளச்சென்ற அ. எ. வி. சங்கத் தலைவர், பதில் பொதுச்செயலாளர் இருவருக்கும் பரபரப்பன சூழ்நிலையில் மிகவும் சூடான வரவேற்பு கிளை உறுப்பினர்களால் வழங்கப்பட்டது. இந்தக் கூட்டம் சென்ற 23-7-75ல் நடைபெற்றது

மார்கழி — தை எழுச்சி ஆசிரிய தலையங்கத்தை கண்டித்து அனுப்பப்பட்ட கிளைச் சங்க தீர்மானம்பற்றி உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய தலைமைப்பீடம் மீது திருவாளர்கள் பாலசிங்கம் இராசேந்திரம் செந்தில் முருகன் ஆகியோர் சரமாரியான கணைதொடுத்தனர்.

இதுபோலவே மூதறிஞர் செல்வாவிற்கும், காசி ஆனந்தனுக்கும் வரவேற்பு கொடுப்பதற்கு தாய்ச்சங்கம் தீர்மானம் எடுத்தும், அதனை அமுல் நடத்தாது தட்டிக்கழித்ததையிட்டு உறுப்பினர்கள் பலத்த கண்டனம் தெரிவித்தார்கள். தலைவரும், பதில்பொதுச்செயலாளரும் சங்க நடவடிக்கைகளில் சர்வாதிகாரமாக நடந்துகொள்கிறார்கள் என்று திரு. விஜயகுமார் குற்றம் சாட்டினர்.

தலைவர் பதில் அளித்துப் பேச எழுந்த போது மீண்டும் அவரை நோக்கி கேள்வி அம்புகள் பறந்தன.

பதில் பொது செயலாளர் ஒரு கட்டத்தில் தான் கூறியவற்றை அங்கத்தவர்களது ஆட்சேபனையை அடுத்து திருப்பி வாபஸ்செய்து கொண்டார்.

இறைவரித் திணைக்கள ஆண்டுக் கூட்டத்தை தொடர்ந்து ஏனைய கிளைக் கூட்டங்களிலும் இதே மாதிரியான சூடான வரவேற்பு அ. எ. வினைஞர் சங்கத்தின் இன்றைய உணர்ச்சியற்ற தலைமைப்பீடத்தை காத்திருப்பதாகத் தெரியவருகிறது.

## சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை!

அங்கிங்கெனாதபடி எங்கும் 'சிங்களம் மட்டும்' கோலோச்சிக் கொண்டிருக்கும் இன்றைய கால கடடத்தில் 'தமிழ் மட்டும்' கோலோச்சுகிறது என்றால் நம்பமுடிகிறதா?

இந்த அதிசயத்தை கொழும்பு இ. போ. ச. பேருந்திகளில் காணலாம். அதிசயம் இதுதான்—

"நான் விரும்புவது
மகிழ்ச்சி மிகு சிறு
குடும்பமொன்றையே"

சோழியன் குடுமி சும்மா ஆடுமா? குடும்பக் கட்டுப்பாட்டு பிரசாரம் என்றவுடன் 'தமிழ் மாத்திரம்' கொடிகட்டிப் பறக்கிறது. மருந்துக்கும் சிங்களத்தை காணோம்!

குடும்பக் கட்டுப்பாட்டு சபையின் இந்த 'தாராள மனப்பான்மை'யால் உண்மையில் தமிழர்களது எண்ணிக்கை விழுந்துகொண்டு போகிறது.

1949—1971 காலத்தில் சிங்களவர்களது மக்கள் தொகை 99% அதிகரித்திருக்கும் பொழுது தமிழர்களது எண்ணிக்கை 98%தான் அதிகரித்திருக்கிறது. மலையகத் தமிழர்களது அதிகரிப்பு விகிதம் ஆக 50% மட்டுமே!

## குடும்பம் அழிந்தாலும் இனவிடுதலையே முக்கியம்!

"என்னைக் கைதுசெய்து இரண்டரை ஆண்டுகள் சிறையில் அடைத்து வைத்தார்கள். அண்மையில் எனது தம்பி சுதர்ஸனையும் கைதுசெய்து கொண்டுபோயிருக்கிறார்கள். எனக்கு இன்னுமொரு தம்பி இருக்கிறான். அவனையும் அவர்கள் கைதுசெய்யக்கூடும். அப்படியே எனது தந்தை, தாய், சகோதரிகள் அனைவரையும் சிறையில் அடைத்தாலும், அதனால் எனது குடும்பமே அழிந்தாலும், எனது குடும்பம் போன்ற பல்லாயிரக்கணக்கான குடும்பங்களைக் கொண்ட தமிழ் இனம் என்றாவது ஒருநாள் விடுதலை பெற்றே தீரும் என்பது எனக்குத்தெளிவாகத்தெரிகிறது"

—29-7-75 கல்லடிக் கூட்டத்தில் காசி ஆனந்தன் பேசியது.

## தமிழ் இளைஞர் பேரவையின் சிரமதானம்

தமிழ் இளைஞர்பேரவையின் கொழும்புக்கிளை பல சிரமதானப் பணிகளை மேற்கொள்ளவிருக்கிறது. அதன் முதற்படியாக, 3-8-75 ஞாயிற்றுக்கிழமை மேற்படி கிளையினர் முகத்துவாரம் பிள்ளையார்கோயிலில்கிளைத் தலைவர் திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் தலைமையில் சிரமதான முயற்சிகளை மேற்கொண்டனர். இப்பணியில் மேற்படி கிளையைச்சேர்ந்த பல இளைஞர்கள் காலைமுதல் மாலை வரை ஈடுபட்டு ஆலய சுற்றுப்புறங்களைப் புனிதமாக்கினர். சிரமதான முடிவில் திரு. ஆ. இரகுபதிபால [illegible] வில் தமிழர் தொழிற்சங்கக் கூட்டணிச்செயலாளர் நாயகம் திரு. இ. பேரின்பநாயகம் அவர்கள் உரையாற்றினார்கள். இச்சிரமதானப் பணிக்கு கோயிலைச்சேர்ந்த திரு. ஜெயக்குமார் பெரிதும் உதவிபுரிந்தார்.

### காவடி எடுக்கவும்...

—1-ம் பக்கத் தொடர்

கவிஞர் காசி ஆனந்தனின் இரண்டாவது சகோதரர் திரு. சிவஜெயம் கடந்த 31-7-75ல் கைது செய்யப்பட்டார். அவர் இப்போது எங்கு சிறை வைக்கப்பட்டிருக்கிறார் என்பது தெரியவில்லை.

காசி ஆனந்தனின் கடைசிச் சகோதரர் திரு. சுதர்சன் ஏற்கெனவே 17-7-75ல் கைதுசெய்யப்பட்டு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்.

காசிஆனத்தனும், அவரது இரு சகோதரர்களும் இப்போது சிறையில் இருக்கின்றனர்! அதாவது கவிஞர் குடும்பமே சிறைக்குள் செந்தமிழுக்காக வாடுகிறது!

வந்தாறுமூலையைச் சேர்ந்த துரைராசசிங்கம் எனும் இளைஞரும் சி. ஐ. டி. பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

### காப்புறுதி நிறுவ...

—4-ம் பக்கத் தொடர்

சாதாரண ஊழியர்களாக சேவையாற்றி வருவதாகவும் பேசப்படுகிறது.

### சிங்களத்தில் மட்டும் டிப்ளோமா!

சுமார் 4-5 வருடங்களாக காப்புறுதிக் கூட்டுத்தாபனம் காப்புறுதி டிப்ளோமாப் பரீட்சை ஒன்றை சிங்கள மொழியில் மட்டும் நடத்தி வருகிறது. தமிழிலும் நடத்துமாறு தமிழ் ஊழியர்கள் விடுத்த கோரிக்கைக்கு 'தமிழில் நடத்த ஆள் வசதி இல்லை' என்றவாறு கூறி தட்டிக் கழித்துவிட்டதாம். ஆனாலும் காப்புறுதி பற்றி தமிழில்போதிக்கக்கூடிய அத்துறையில் மிக உயர்தரதரா தரமுள்ள பல ஊழியர்கள் அங்கு பணிபுரிந்து வருவதாகத் தெரியவருகிறது.

இந் நிலையில் திரு. இலங்கரத்தினாவின் பேச்சில் உள்ள 'நேர்மை'யை என்னவென்று சொல்வது? சிங்கள அரசியல்வாதிகள் ஒரு புறத்தில் இனி ஒற்றுமை பற்றிப்பேசிக் கொண்டும் மறுபுறத்தில் இனவேற்றுமை நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருவது, தமிழர்களுக்கு ஒன்றும் புதிய விஷய மல்லவே!

—அர்ச்சுனன்.

அருள் விருந்து

"பேச்சை வெல்ல வல்லது மௌனம்"

தா மசக்கரம்,

15 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார்சோப் மேலுறைகளை அனுப்பி மகாத்மா காந்தியின் "படிப்பினை" என்ற புத்தகத்தைப்பெற்றுக்கொள்ளுங்கள்.

"அசட்டு மாப்பிள்ளையைச்" சந்திக்க எமது வானொலி நிகழ்ச்சியை இன்று மாலை 3-30 மணி முதல் 3-45 வரை கேட்டு மகிழுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்.
த. பெ. எண்77. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகம் முழுவதும் பட்டினிச் சாவுகள்!

## அரசு பொறுப்பேற்ற தோட்டங்களில் தமிழர்கள் படுகின்ற கொடுமைகள்!

மலையக மக்கள் இன்று எப்படி வாழ்கிருர்கள் என்பதை ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் அறிய வேண்டும் என்ற எண்ணத்துடன் மலையகத்தில், பண்டாரவளைப்பகுதியில் பலரை நேரில் சந்தித்துப்பேசினேன். அவர்கள் தெரிவித்த கருத்துக்களை உள்ளதுஉள்ளபடியே எழுதுகிறேன்.

1973ம் ஆண்டு ஐப்பசி மாதம் கடுமையான உணவுப் பஞ்சம் நாட்டை எதிர் நோக்கியது. இவ் உணவுப் பஞ்சத்தில் ஏனைய மாவட்டங்களை விட மலையகப் பகுதிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. அக்காலத்தில் அப்பகுதியில் நானிருந்தபோது அங்கு நடைபெற்ற இலசெய்திகளை ஏற்கெனவே சுதந்திரனில் எழுதியுள்ளேன்.

இன்று தோட்டங்களை அரசு பொறுப்பேற்றுவிட்டது. அரசு பொறுப்பேற்ற தோட்டங்களினுல் தோட்டத்தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்பட்டதா என்பதே இன்றைய கேள்வியாகும்.

நான் பண்டாரவளையிலிருந்து 18 மைல் தொலைவிலுள்ள கவரக்கலை எஸ்டேட், தேமோதரை, பிற்றபலை போன்ற இடங்களுக்குச் சென்றேன். இத்தோட்டங்களை இன்று அரசு பொறுப்பேற்றுள்ளது. இங்கு ஒரு தொழிலாளிக்கு நாளொன்றிற்கு ரூ 5-85 சம்பளமாகக் கிடைக்கிறது. பெண்களுக்கு ரூ 4-70ம் பதினைந்து வயதுக்குட்பட்ட ஆணுக்கு ரூ3-75ம் பெண்ணுக்கு ரூ 2-75ம் சம்பளமாகக் கிடைக்கிறது.

இவர்கள் காலை 7 மணிக்குப் புறப்பட்டு மாலை 4மணி வரை வேலை செய்கிருர்கள். ஒரு குடும்பத்தில் 3பேர் வேலை செய்தால் அவர்களுக்கு வழங்கும் ரேசன் அரிசிக்கும், மாவுக்கும், சீனிக்கும் மட்டும் வேலை கிடைக்கிறது. கையில் காசு இவர்களுக்குக் கிடைப்பதில்லை. வாரத்தில் நான்கு நாட்களுக்கு மட்டும் வேலை கிடைக்கிறது. அப்படியாஞல் மாசத்தில் 16, 17 நாட்கள் மட்டுமே வேலை செய்யலாம். இந்தக் கஷ்டத்தால் ஆண்கள் தோட்டங்களை விட்டு வெளியேறி அம்பாறை, மட்டக்களப்பு வவுனியா, யாழ்ப்பாணம் என்று வேலை தேடிச்சென்றுவிட்டார்கள்.

தோட்டப்பகுதிகளில் சிறுவர் சிறுமியர் அனைவரும் கொழும்பு, யாழ்ப்பாணம் என்று வீட்டு வேலைகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டார்கள். ஏழு, எட்டு வயதுப் பிள்ளைகளும், வயிற்றுப் பசியைப் போக்கத்தோட்டங்களிலிருந்து வெளியேறியுள்ளனர்.

நான் சென்றிருந்த கவரக்கலைத்தோட்டத்தில் கடந்த ஆண்டு பட்டினியால் 87 பேர் செத்து மடிந்திருக்கிருர்கள். ஒரு குடும்பத்தில் தாய், வயது

### புத்தொளி

வந்த மகள், அவள் தங்கை அடுத்தடுத்து இறந்திருக்கிருர்கள். பஞ்சத்தால் உணவுப்பொருள் வாங்கப் பணம் கிடைக்காததால் பெட்டி, சட்டி, முட்டி என்று விற்றுவிட்டார்கள். பணம்படைத்தோர் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திவிட்டார்கள். சேர்த்து வைத்த தங்க நகைகள், பித்தளைப் பாத்திரங்கள் அனைத்தையும் விற்று விட்டார்கள். வாரத்தில் 3 நாட்கள் வரை அவர்கள் தொடர்ந்து பட்டினி கிடந்திருக்கிருர்கள். இலையும் குழையும் அவர்கள் உணவாயின. சேமங்கிழங்கு போன்றவையும் அவர்களுக்கு உணவாக இருந்தன. சத்துள்ள உணவு எதுவும் கிடையாது. உழைக்கும் தொழிலாளி, வெயிலென்றும் பனியென்றும் பாராது இரத்தத்தை வியர்வையாக்கி உழைக்கும் தொழிலாளிகள் மாவை வாங்கி கீரை வகைகளைப் போட்டு பொலிவாக்கி வயிற்றை நிரப்பியிருக்கிருர்கள். உயிர் இருப்பதற்காக சாப்பிடுகிருேமா, சாப்பிடும் வரை தான் உயிர் இருக்கிறதோ என்ற உணர்வுடன் கிடைத்ததைச் சாப்பிட்டார்கள்.

வாரத்தில் 21 வேளை சாப்பிடும் ஒரு தொழிலாளி 2 ருத்தல் மாவுடனும் 2 ருத்தல் அரிசியுடனும் எவ்வாறு சமாளிக்க முடியும். வாரத்தில் 21 வேளை சாப்பிடவேண்டியவன் 15 வேளையாயினும் சரியாக சாப்பிடுவதற்கு இன்று வசதி செய்யப்படவில்லை.

அரசாங்கம் தோட்டங்களை எடுத்தபின் தொழிலாளருக்கு உருப்படியாக எதையும் செய்ய முன்வரவில்லை. சம்பளத்தைக் கூட்டவில்லை. வாரத்தில் வேலைசெய்யும் நாளும் அதிகரிக்கவில்லை. தனிப்பட்ட தோட்ட நிர்வாகம் இதுவரை தேயிலை என்றும், விறகு என்றும் சலுகையளித்து வந்ததும் இன்று நிற்பாட்டப்பட்டுள்ளது.

ஒரு வருடத்தில் 280 நாட்கள் வேலைசெய்தால் 17 நாட்கள் போனஸ் கொடுக்கிருர்கள். இதை எடுத்து அவர்கள் தமக்குவேண்டிய உடை மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்வது எங்ஙனம்?

பல்லாண்டு காலமாக பஞ்சப்படி பெற்றுக்கொடுப்பதற்குத் தொழிற் சங்கங்கள் போராடியும் இன்றுவரை எதுவும் நடக்கவில்லை.

எனவே அரசாங்கம் தோட்டங்களை எடுத்தால் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். தனிப்பட்ட நிர்வாகம் செய்த சலுகைகளையும் ஒழித்துக்கட்டி, அவர்களை ஓட்டாண்டியாக்கிஞல் தொழிலாளர்கள் எங்கு போவது?

இன்னும் நகைநட்டு, பொருள்பண்டம் அத்தனையையும் விற்று வெறுங்கையுடன் வாழும் தோட்டத் தொழிலாளர் சுபீட்சமாக வாழ வழிசெய்யாவிட்டாலும், மூன்று வேளை வயிருர உண்ண வகை செய்யப்படவேண்டும்.

# ஏன் வேண்டும் தமிழ்நாடு

வியட்னுமை வியட்னுமியரே ஆளவேண்டும் என்பவர்கள், கம்போடியாவை கம்போடியரே கட்டியாளவேண்டுமென்போர், பாலஸ்தீனம் அரபியப் பிரதேசம் அதனுல் அவனே ஆளும் உரிமை அவர்கட்கே என்று கூறுவோர்எல்லாம்ஈழத்தில் தலைமுறை, தலைமுறையாக ஆண்டுவந்த தமிழர்கள், மீண்டும் ஒருமுறை அந்த உரிமையினைப் பெறவேண்டும் என்று கூறினுல் மட்டும் முகத்தைச் சுழிப்பதேன்? அவர்களுடைய அடிப்படைக்கொள்கைகட்கு இது முரண்பட்டதல்லவே!

தமிழர்கட்கு ஏன் தமிழ் நாடு வேண்டுமென்று விளக்கம் தருவோரெல்லாம் தமிழர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன அதனுலேயே தமிழர்கள் தமிழ் நாடு கோருகிருர்கள் என்று. அப்படியாஞல் தற்காலிகமாக ஒரு அரசு தமிழர்கள் உரிமைகளைத்தர ஒப்புக்கொள்கின்றதென்றுல் தமிழ் நாட்டின் தேவை இல்லாமல் போய்விடுமா? இல்லை. இல்லவே இல்லை.

தமிழர்களுக்கு தமிழ்நாடு தேவை. காரணம் நமது நாட்டை ஆளும் உரிமை அவர்கட்குவேண்டும். நமது தலைவிதியை என்றென்றைக்கும் தீர்மானிக்கும் உரிமை அவர்கட்குவேண்டும். தம்மைத்தாமே ஆளும் உரிமையும் தம்மைத்தாமே எப்படி ஆள்வது என்பது பற்றி தீர்மானிக்கும் உரிமையும் வேண்டும்.

சிங்களம் மட்டும் சட்டம் சிங்களவனே போட்ட சட்டம். குடியுரிமை பறிக்கும் சட்டம். அவன் போட்ட சட்டம். இதை இந்நாட்டுத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவுமில்லை. ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். குடியரசுச் சட்டம் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளாமல் பகிஷ்கரிக்கப்பட்டதொன்று.

இந்தச் சட்டங்கள் எல்லாம் தமிழர்கள் விருப்பாமலே அவர்கள் தொண்டைக்குள் திணிக்கப்பட்டது. இந்தத்தளைகளினின்றும் தமிழன் விடுதலை பெற வேண்டுமாஞல் தன்னைத்தானே ஆளும் உரிமை அவனுக்கு வேண்டும். அதுவே அவனது இலட்சியம். தாகம், முடிந்த முடிவு. எல்லாம் தன்னைத்தானே கட்டியாளும் உரிமை அவனுக்கு வந்தால் மட்டுமே தமிழ் நாட்டினை வளம்படுத்திட, கட்டியெழுப்பிட அவஞல் முடியும். அவன் தனது முழுத்திறனையும் வெளிப்படுத்திட சிங்கள ஆட்சியில் வசதியும் இல்லை, வாய்ப்பும் இல்லை.

தமிழ்நாடு சுதந்திரநாடாகும்போது சிங்களத்தின் அரிசி தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு விவசாயம் விருத்தி செய்யப்படக் கூடிய சாத்தியம் உண்டு. நமது நாட்டின் வளங்கள் சூறையாடப்படும் போது அங்கே அதேயளவில் வசதிகள் பெருக்கப்படவில்லை, பெறப்படும் அளவுக்கு அங்கே தொழில்துறை முன்னேற்றங்கள் ஏற்படவழிகள் வகுக்கப்படவில்லை. நமது நாட்டிலே ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பசிங்களவர்களே அனுப்பப்படுகிருர்கள்.

மொத்தத்தில் நமது நாட்டைச் சுரண்டுகிருர்கள் சூறையாடுகிருர்கள் தமது அரசியல் கருத்துக்களைத் திணிக்கிருர்கள். நம்மைச் சுரண்டிய பிரிட்டிசார் ஏகாதிபத்தியமென்றுல், இவர்கள் சிங்கள ஏகாதிபத்தியம்தான் இதில் சந்தேகம் இல்லை. அதிலிருந்து நாட்டை விடுதலை செய்திட சாதி, மத, கட்சி பேதமின்றி தமிழர்கள் முன் வர வேண்டும்.

தமிழ் நாடு தமிழர்களின் இன்றைய தேவை. இது தவிர்க்கமுடியாத தேவை. இது ஒரு இனத்தின் உரிமை அதை வென்றெடுக்க தோன்றிய இயக்கமே தமிழர் கூட்டணி. இது ஒரு விடுதலை இயக்கமேயன்றி ஒரு கட்சியல்ல. தமிழகம் விடுதலை பெறும்போது அதனை எப்படி அடையலாம் என்பதனை தமிழர்களே தீர்மானிப்பார்கள். ஆகவே தமிழர்கள் எந்தக் கட்சியின் கருத்தினை ஏற்ருலும் சிங்கள ஏகாதிபத்தியத்தினின்றும் விடுதலை பெற தமிழர் கூட்டணியுடன் இணைந்து விடுதலைக்குப்போராட முன் வரவேண்டும். இப்போது ஒரு புதிய சரித்திரம் எழுதப்படுகிறது. அதிலே துரோகிகள் வரலாறும் சேர்த்தே எழுதப்படும். தமிழர் விடுதலைக்குத் தமிழனே எதிரி என்ற நிலை வேண்டாம். தமிழர்கள் எல்லோரும் சேர்ந்து காலம்காலமாக இருந்த தமிழ்நாட்டினை அமைப்போமாக.

—வாணிதாசன்.

# பூக்கும் ஓர் தமிழர் ஈழம்!

வீரமே தமிழர் மூச்சு!
  வெற்றியே அவர் தம் பேச்சு!
மானமே அமிழ்தின் ஊற்று!
  மறக்கு மா தமிழர் கூட்டம்?
வீணரே! வேண்டாம் பேச்சு!
  விடிவுதான் வேண்டும் காட்சி!
ஊனமே! உயிரே! வாழி!
  உதித்திடும் தமிழர் ஆட்சி

என்று எம் தமிழ வாழ்வு!
  எப்படிப்பொறுப்போம் தாழ்வு!
தம்பியே! எழுந்து ஓடு!
  'தாங்கிடோம்' சத்தம் போடு!
குன்றுகள் உலகின் மேடு!
  குவிதமிழ்ப் புகழின் வீடு
பொன்றுமா? இன்னும், இன்னும்
  பொறுத்திடோம்! எதிர்ப்போம்!
வாழ்வோம்!

கொண்டு வா! படைகள் கூட்டு
  போர்க்களம் இனிநம் சொந்தம்
'வென்று வா' என்ருள் அன்னை
  வெறியொடு சுழற்று வாளை
நன்றடா, நன்று அன்னை
  நாயகி வாழ்வு என்று
இன்றுபோய் உதிக்கும் நாளில்
  எழுதுவோம் புதிய மாட்சி!

அன்றிலும் பெடையும் எங்கள்
  அருந்தமிழ் வாழ்வும், நாமும்
குன்றினில் விதை நெல்லாக
  குலம் கெடும் காலம் இஃது
முந்துவோம்! குதிப்போம்! நில்லோம்!
  மூண்டெழும் உணர்ச்சி வெள்ளம்
பொங்கிடும்! கொதிக்கும்! நாளை
  பூக்கும் ஓர் தமிழர் ஈழம்

—வந்தாறுமூலை அண்ணைதாசன்

## கல்வி கலை பண்பாட்டுக் காப்புக் கழகம்!

23-6-75ல் நடைபெற்ற கல்வி, கலை, பண்பாட்டுக் காப்புக் கழகத்தின் ஐந்தாம் ஆண்டின் பொதுக் கூட்டத்தில்புதிதாகதெரியப்பட்ட ஆட்சிக்குழுவிலர் விபரம் வருமாறு:-

அறங்காவலர்: திரு. த. சோமசுந்தரம் (சட்டத்தரணி) திரு. வை. கந்தப்பச்செட்டியார், சிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசா நீதிராசா (சமாதான நீதிபதி) திரு. சி. சின்னத்துரை, திரு. வை. சி. சி. இ. பிரேமானந்தா, தலைவர்: திரு. சி. நாகராசா (சட்டத்தரணி) துணைத்தலைவர்கள்; வைத்திய கலாநிதி ச. பொன்னம்பலம், திரு. ஆ. துரைராசசிங்கம் (யா. மா. ச. உ.) பொதுச்செயலாளர்; ஓவியர் ச. பெனடிக்ற் துணைச் செயலாளர்; திரு. ச. கந்தையா பொருளாளர்: திரு. தா. சிவபாதசுந்தரம் (கிராமசேவையாளர்)

கல்விக்குழு இயக்குநர்: திரு. த. சபாரத்தினம்.

கலைக்குழு இயக்குநர்: திரு. க. கனகையா

பண்பாட்டுக் குழு இயக்குநர்: திரு. சு. இராசநாயகம் உட்பட 21 உறுப்பினர் ஆட்சிக் குழுவினராகத்தெரிவு செய்யபபட்டனர்.

## வள்ளுவர் நினை...

—3-ம் பக்கத் தொடர்

சேவியர் கல்லூரியிற்கோலாகலமாக நடாத்திய வள்ளுவர் விழாவில் ஏகமனதாக நிறைவேறியது.

பொதுமக்கள் சார்பில் கிடைத்த தீர்மானத்தைச் சபையின் அங்கீகரிப்புக்குச் சமர்ப்பித்தவர் இ. அ. இ. பொதுச்செயலாளர் திரு. வேல் அமிர்தலிங்கம். தீர்மானத்தை முன்மொழிந்து விளக்கவுரை ஆற்றியவர் திரு. என். பத்மநாதன் B.A. (Hons) வழிமொழிந்தவர் திருமதி. பூ. தாயுமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கச் செய்திகள்

## "தமிழர் கூட்டணியின் கட்டளைக்கே தமிழ் இளைஞர்படை காத்திருக்கிறது!"

### திருகோணமலையில் நாவலர் அமிர்தலிங்கம் முழக்கம்!

பலமான முறையில் புனரமைக்கப்பட்ட திருமலை தமிழ் இளைஞர் பேரவையின் கருத்தரங்கு கடந்த 25-7-75ம் திகதிகளில் திருமலை நகரிலும் பல கிராமப் புறங்களிலும் நடைபெற்று முடிந்துள்ளன. இக்கருத்தரங்குகளில் நாவலர் அ. அமிர்தலிங்கம் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் திரு. மாவை சேனாதிராசா திரு வண்ணை ஆனந்தன் திரு. கணபதிப்பிள்ளை முதலியோர் கலந்து கொண்டார்கள்.

திருமலை இளைஞர் பேரவை மேற்கொண்ட முயற்சியின் பயனாக பேரவையின் புதிய முறை அமைப்பு திருமலையில் நிலையானதொரு எழுச்சி பெற்றிருக்கிறது. இளைஞர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய இக் கருத்தரங்குகளில் திரு. பா. நேமிநாதன் திரு அ. தங்கத்துரை முதலியோரும் விஷேசமாக கருத்துரை வழங்கினார்கள்.

### 24-7-75 (வியாழன்)

சரியாக காலை 7 மணிக்கு திருமலை த. இ. பேரவை செயலகத்தில் அமைப்புச் செயலாளர் இ. இராசரத்தினம் தலைமையில் கூடிய நடவடிக்கைக் குழு தமது எதிர்கால திட்டங்கள் பற்றி கூடி ஆராய்ந்தது.

சரியாக காலை 8.30 மணிக்கு பேரவையின் ஆலோசகர் குழுவும், நடவடிக்கைக் குழுவும் கூடி அந்தரங்கமான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டது. திரு. மாவை சேனாதிராசாவும், திரு. வண்ணை ஆந்தனும் அங்கு சமூகமளித்திருந்தார்கள்.

### மகளிர் பேரவை

பி. ப. 1 மணி இருந்து மாலை 5 மணிவரை மகளிர் பேரவை கருத்தரங்கு திருமலை ம. பே. அமைப்புச் செயலாளர் திருமதி பிலோமினா லோரன்ஸ் தலைமையில் திரு. பா. நேமிநாதன் (திருமலை பா. உ.) இல்லத்தில் கூடி கருத்துக்களை பரிமாறிக்கொண்டது. த. ம. பே. பலமான அமைப்பின் கீழ் 12 பேர்கொண்ட ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

குழுவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். அமைப்புச் செயலாளர்:— திருமதி பிலோமினா லோரன்ஸ், தலைவி:— திருமதி சத்தியேஸ்வரி தங்கத்துரை (இவர் திரு. அ. தங்கத்துரை மூதூர் பா. உ. வின் மனைவியார்.) உப தலைவி:— திருமதி எம். ஜே. அமிர்தநாதர், உப செயலாளர்:— திருமதி தங்கம் சுப்பிரமணியம், பொருளாளர்: செல்வி அன்னமுத்து. செயற்குழு உறுப்பினர்களாக திருமதி அந்தோனியம்மா தங்கராசா, திருமதி நா. மனோன்மணி, திருமதி புஸ்பம் மகாதேவா திருமதி இராசபாக்கியம் பெருமாள், திருமதி திரேசம்மா சூசைப்பிள்ளை, திருமதி சரோஜினி கோணேஸ்வரன், செல்வி ஸ்ரெலா நேசமணி. போன்றோர் இடம் பெறுகிறார்கள்.

நடைபெற்ற மகளிர் பேரவை கருத்தரங்கில் திரு. பா. நேமிநாதன், திரு. சேனாதிராசா, திரு. வண்ணை ஆனந்தன், திரு. இ. இராசரத்தினம் முதலியோர் உரையாற்றினார்கள்.

### பன்குளம்

மாலை 6 மணிக்கு பன்குளத்திலே திரு. காளிக்குட்டி அவர்கள் தலைமையில் கருத்தரங்கு பல நூறு இளைஞர்கள் மத்தியில் நடைபெற்றது. இதில் திரு. சேனாதிராசா, திரு. வண்ணை ஆனந்தன், திரு. இ. இராசரத்தினம் முதலியோர் உரையாற்றினர். பின்னர் தமிழ் இளைஞர்களிடையே எழுந்த சந்தேகங்கள் நீக்கப்பட்டு—சுதந்திரத் தமிழ் ஈழம் அடையும் போராட்ட வழிகள் தெளிவுபடுத்தப் பட்டன.

### 25-7-75 சாம்பல்தீவு

காலை 10 மணியளவில் சாம்பல்தீவு, சல்லி மக்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கு சாம்பல்தீவில் நடைபெற்றது. கிராம சபைத் தலைவர் திரு. வேலாயுதம் தலைமையில் இடம் பெற்ற இக்கருத்தரங்கிற்கு ஒலிபெருக்கி பாவிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தும் இறுதிநேரத்தில் பொலிசாரினால் அது தடை செய்யப்பட்டது. கருத்தரங்கு நடைபெற்றவேளை ஒரு பொலிஸ் ஜீப் வண்டியையும்



பொலிஸ் அதிகாரிகளையும், சி. ஐ. டி. பிரிவின் இரகசிய அதிகாரிகளையும் அங்கு காணக்கூடியதாக இருந்தது. கருத்தரங்கில் உரையாற்றிய அத்தனை பேரினதும் பேச்சுக்களை சி. ஐ. டி. அதிகாரியினர் உடனுக்குடன் பதிவு செய்தனர்.

இந்த நிலையில், நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய யாவரும் மிக உணர்ச்சியுடன் தமிழ் ஈழம் அடையும் மார்க்கத்தை தெளிவுபடுத்திய போது இளைஞர்கள், மாதர்கள் யாவரும் கரகோஷம் செய்து ஆரவாரித்தனர். திரு. பா. நேமிநாதன் பா. உ. பேசிய போது "பொலிசார் எமக்கு ஒலிபெருக்கி அனுமதி மறுத்தமை அவர்களுக்குத்தான் நஷ்டமாகும். எமது பேச்சுக்களை அவர்கள் தெளிவாகக் கேட்பதற்கு வாய்ப்பிருக்காது.—ஆனாலும் நாம் அவர்களது சங்கடமான நிலையைப் போக்குவதற்காக உரத்த குரலில் தெளிவாக பேசவிருக்கிறோம். பாவம் அவர்கள் நன்றாக எமது பேச்சைக் கேட்டு குறிப்பெடுக்கலாம்" என்றார்.

இளைஞர்கள், ஆதரவாளர்கள், மாதர்களிடையே எழுந்த பலத்த கைதட்டல் இடையே தொடர்ந்து கருத்தரங்கு நடைபெற்றது.

"இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் பேரவை அமைந்து செயற்படவேண்டும்." என்று மாவை சேனாதிராசா பேசினார்.

வண்ணை ஆனந்தன் பேசுகையில் "நாம் பச்சையாக, பகிரங்கமாகப் பேசுகிறோம். சுதந்திரத் தமிழ் ஈழத்தை பிரித்தெடுக்கப்போகிறோம். இதை சொல்வதற்கு நான் யாருக்கும் பயப்படபோவதில்லை" என்றார்.

இந்தச் சமயத்தில் திருமலை த. இ. பேரவையின் அழைப்பைப் புறக்கணிக்காமல் அனுராதபுரத்திலிருந்து ஓடோடிவந்த நாவலர் அ. அமிர்தலிங்கமும், அவரது பாரியாருமான திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கமும் ஒரு வாடகைக் காரில் சாம்பல்தீவு வந்து சேர்ந்தனர்.

தமிழர் கூட்டணிச் செயலாளரையும் தமிழ் மகளிர் பேரவை செயலாளரையும் கண்ட சாம்பல்தீவு மக்கள் அளவில்லா மகிழ்ச்சி கொண்டு தமது வாழ்த்தொலியைத் தெரிவித்தனர்.

நாவலர் அமிர்தலிங்கம் பேசுகையில் "இதுவரை காலமும் மூலை முடுக்குகளில் அடங்கிக்கிடந்த தமிழ் இளைஞர்கள் இன்றைய நிலையில் தமது சுதந்திரம் குறித்து சிந்திக்கத் தலைப்பட்டுள்ளார்கள். கூட்டணியின் போராட்ட அறைகூவல், பேரிகையின் முழக்கம் கேட்டால் இளைஞர் படை 'தமிழ் ஈழம்' அமைக்க தயாராகி விடும்" என்று கூறினார்.

"கணவன், பிள்ளை, வீடு—என்று கதியாக இருந்த தாய்க்குலம் இப்போது தமது விடுதலை குறித்து போராட தயாராகியுள்ளது. இந்த நிலையை நான் முன்னொருபோதும் கண்டதில்லை"—என்று அடுத்து பேசிய திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு தமிழ் எழுச்சி கீதம் பாடுவதற்காக சாம்பல்தீவைச் சார்ந்த ஐந்து உயர்வகுப்பு மாணவிகள் பாடசாலை அதிபரின் சொல்லையும் மீறி பாடசாலைக்குப் போகாது நடைபெற்ற கருத்தரங்கில் தமிழ் எழுச்சி கீதம் பாடியமை ஈண்டு மிகவும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

### 10ம் குறிச்சி

தமிழ் சுதந்திர வேட்கை கொண்டமீனவர்கள் பெரும் பகுதியாக வாழும் 10ம் குறிச்சியில் திருமலை த. இ. பேரவையைச் சேர்ந்த திரு. கோ. சுந்தரமகேசன் தலைமையில் பி. ப. 3 மணிக்கு கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் நாவலர் அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திரு. பா. நேமிநாதன், திரு. அ. தங்கத்துரை திரு. மாவை சேனாதிராசா, திரு. வண்ணை ஆனந்தன் முதலியோர் உரை நிகழ்த்தினார்கள்.

### திருமலை

சரியாக மாலை 6 மணிக்கு திருமலை சமூக சேவை நிலையத்தில் திருமலை த. இ. பே. செயலாளர் இ. இராசரத்தினம் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களும், ஆதரவாளர்களும், பெண்களும் இதில் பங்கு பற்றினர். இக்கருத்தரங்கில் வைத்து செயலாளர் இராசரத்தினத்தால் தமிழ் இளைஞர் பேரவைக்கு 15 பிரிவுகளைக் கொண்ட செயல் திட்டங்களும், 10 பிரிவைக் கொண்ட செயல் திட்டங்களும் வெளியிடப்பட்டன. த. இ. பே. தலைமைப் பீடத்தால் நிரந்தரமான அமைப்பு விதிகள் வெளியிடப்படும்வரை மேற்படி வெளியிடப்பட்ட விதிகள் திருமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அமுலில் இருக்கும்.

நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் இ. பே. பற்றி தெளிவான விளக்கம் தந்து கூடியிருந்த இளைஞர்களின் சந்தேகங்களைப் போக்கினார். "தமிழ் இளைஞர் பேரவையும், மகளிர் பேரவையும், கூட்டணி என்ற பலமான அமைப்பின் கீழ் நின்று சுதந்திரத் தமிழ் ஈழத்திற்காகப் போராடும் காலம் அண்மித்துவிட்டது" என்று இ. ம. பே. செயலாளரான திருமதி மங்கையற்கரசி கூறியபோது பெண்கள் பகுதியிலிருந்து பலமான கரகோஷம் எழுந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

"முஜிபுர் ரகுமானின் 'அவாமி லீக்கிற்கு'—'முக்திபாஹினி'—என்ற இளைஞர் படை எப்படி பலமாக அமைந்ததோ அதுபோல் தான் த. கூட்டணிக்கு—தமிழ் இ. பேரவையும்!"—என்று மாவை சேனாதி கூறினார்.

அடுத்துப் பேசிய திரு. வண்ணை ஆனந்தன் தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்கம் இழைக்கும் அநீதிகளை ஆதாரங்களுடன் எடுத்துக் கூறினார். அவர் மேலும் பேசுகையில்:

"இன்றைய நிலையில் தமிழர்களுக்கென்று ஒரு பூரண சுதந்திரம் பெற்ற நாடு உலகில் இல்லை.—இதனால் இலங்கைத் தமிழர்களுக்கென்று நாம் எமக்கு ஒரு நாட்டை அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை. பலமான போராட்டத்தின் மத்தியிலேதான் நாம் தமிழ் ஈழம் அமைக்கவேண்டுமாகையால் இந்தச் சத்திய வேள்வியில் குதிக்க த. இ. பேரவையும், ம. பேரவையும் தயாராக வேண்டும்"—என்று வலியுறுத்தினார்.

திரு. அ. தங்கத்துரை பேசுகையில் "இன பேதங்களை மறந்து 'தமிழர்கள்'—என்ற நிலையில் நாம் ஒன்றுபட்டு செயலாற்றிடின் 'தமிழ் ஈழம்' பெறுவது அவ்வளவு ஒன்றும் கஷ்டமானதல்ல என்றார்.

திரு. பா. நேமிநாதன் பேசும் போது... "தமிழ் பகுதிகளில் அந்நியரின் குடியேற்றம் தவிர்க்கப்பட வேண்டும். தமிழ் இளைஞர்கள் அரசாங்க இலாகாக்களில் தொழில் பெறும் எண்ணத்தை விடுத்து எமது மண் வளத்தைப் பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபட வேண்டும். அப்படியானால் எமது தமிழ் பிரதேசங்களில் அந்நியரின் ஊடுருவல்களைத் தவிர்க்க முடியும்"—என்றார்.

தொடர்ந்து திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தின் தமிழ் தேசிய கீதத்துடன் இளைஞர்களின் சந்தேகங்களின் வடிவாக எழுந்த கேள்விகளுக்கு தகுந்த பதில் தரப்பட்டு கருத்தரங்கு இனிதே முடிவு பெற்றது.

### விஸ்வமடு இளைஞர் பேரவை

விஸ்வமடு இளைஞர் பேரவைக் கிளையின் செயற்குழுத் தெரிவு கடந்த 18-7-75 இல் இளைஞர் பேரவை புனரமைப்புக்குழுச் செயலாளர் மாவை சேனாதிராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தலைவராக இரா. கார்த்திகேசு அவர்களும் உபதலைவராக அ. மகேந்திரம் அவர்களும் செயலாளராக சு. சிறீதரன் அவர்களும் துணைச்செயலாளராக ச. குருகுலசிங்கம் அவர்களும் பொருளாளராக ப. வை. ஜெயபாலன் அவர்களும் செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் சொ. யோகநாதன், சி. சிறீகாந்தா, செ. சோதிலிங்கம் சி. ரங்கநாதன், சுந்தரராஜன், பொ. சிவராசா, இ. நம்பியாரூரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி தமிழ் மன்றம்

இலங்கைத்தொழில் நுட்பக்கல்லூரித் தமிழ் மன்றத்தின் புதிய (75-76) நிர்வாகிகள் தேர்தல் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

காப்பாளர்: அதிபர், உப காப்பாளர்கள். திரு. பொ. மாணிக்கவாசகர், திரு. சங்கரப்பிள்ளை, தலைவர்: த. நியூட்டன் ஞானச்சந்திரன், உபதலைவர்: எம். எம். ஏ. கபூர், பொதுச்செயலாளர்: பொ. தி. ஸ்ரீதரன், துணைச் செயலாளர் கே. விநாயகமூர்த்தி, இதழாசிரியர்:- இ. இராசக்கோன், பொருளாளர்: ப இராசலிங்கம், இலக்கியச்செயலாளர்: திரு. எஸ். பொன்னுத்துரை.

### இந்து மாமன்றக்...

—2-ம் பக்கத் தொடர்

பட்டு பொருளாதார கல்வி மேமப்பாடு ஏற்படவேண்டுமென்பதை உணரவேண்டுமென்றும் திரு. மகேந்திரன் இந்து மாமன்றச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தமிழர் கூட்டணி ஆதரவாளர்களே மீண்டும் தெரிவு! புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினர் படுதோல்வி!

அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் பதினைன்காவது ஆண்டுப் பொதுக்கூட்டம் ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி வெள்ளியன்று திருகோணமலை சமூகசேவை நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. புதிய ஆண்டுக்கான ஆட்சிக்குழுவின் தெரிவிற்காக பலதத போட்டி இருப்பதாகஎதிர்பார்க்கப்பட்டது.

கூட்டணி ஆதரவாளர்களை எதிர்த்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் இளைஞர்கள் சிலர் போட்டியிட்டனர். பெருமளவில் இளைஞர்களின் ஆதரவு தமக்குக் கிடைக்கும் என அவர்கள் எதிர்பார்த்ததால் போட்டி பலமாக இருக்குமென்றே நம்பப்பட்டது. அதுமட்டுமன்றி தமிழர் கூட்டணி ஆதரவாளர்களுக்கு எதிராக பலத்த பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டது. அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்திலும் தங்கள் ஊடுருவலை நடத்திவிடலாமென புரட்சிக் கழகத்தைச் சார்ந்தவர்கள் நம்பியிருந்தார்கள். ஆயினும் இளையோர்கள் முதியோர்கள் என்ற பாகுபாடின்றி, சிங்களத் தலைமைகளைப் புறக்கணித்து தமிழர் கூட்டணி ஆதரவாளர்களையே மீண்டும் அதிகப்படியான வாக்குகளினால் தெரிவுசெய்துள்ளார்கள். கம்யூனிஸ்ட் புரட்சிக்கழகத்தைச் சார்ந்த வே. தருமலிங்கம் என்பவருக்கு 9 வாக்குகளே கிடைத்துள்ளன. இதே விதமாக அவரைச் சார்ந்துள்ளவர்களும் படுதோல்வியடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்குழுவினரால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களும் தோற்கடிக்கப்பட்டன. அவர்கள் கொண்டுவந்த தீர்மானங்களுள்—

"தற்கொலைப் பாதைக்குத் தமிழினத்தை இட்டுச் செல்லும் முதலாளித்துவத் தமிழர் கூட்டணியோடு வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ எந்த விதமான உறவையும் வைத்திருப்பதில்லையென சங்கம் தீர்மானிக்கவேண்டு" மென்பதும் ஒன்றாகும்.

இத்தீர்மானம் சபைக்கு விடப்பட்டபோது பலத்த எதிர்ப்புக் கிளம்பியதோடு, தற்போது தமிழ்த் தொழிலாளர்கள் மட்டுமன்றி, தமிழினம் முழுவதும் தமிழர் கூட்டணியிலேயே நம்பிக்கை வைக்கமுடியும்—வைக்கவேண்டுமென்று இளைய தலைமுறையைச்சேர்ந்த சங்க உறுப்பினர்கள் ஆணித்தரமாக வாதிட்டனர். புரட்சிக் கழகத்தைச் சார்ந்தவர்கள் கூட்டணி ஆதரவாளர்களின் ஆணித்தரமான வாதங்களுக்கு எதிர் நிற்க முடியாமற் திணறியதோடு தீர்மானமும் பலத்த தோல்வியடைந்தது.

இக்கூட்டத்திற்கு கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம், அனுராதபுரம், ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் சங்க உறுப்பினர்கள் பெருமளவில் வந்து கலந்துகொண்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---



## செவ்வந்தி மகாலிங்கம்

தோற்றம் — 3-5-1964

மறைவு — 28-7-1972

சிரித்த மலரடி நீ
செல்வக் குலக்கொழுந்து

எரித்த தணற் புழுவாய்
எரிவோம் உனைநினைந்து

---

## வள்ளுவர் சிலை திறப்பு சிறப்பு விழா

சாவகச்சேரியில் நடைபெறவிருக்கும் வள்ளுவர் சிலைத் திறப்பு விழா 10.8.75 ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் திரு. ஆறுமுகம் தலைமையில் நடைபெறுகிறது. விழாவில் திரு. வி. என். நவரத்தினம் பா.உ. உட்பட பலர் பேசுவர். விழாவில் புளுகர் பொன்னையா நாடகமும் இடம்பெறும்.

---


## செல்லமகால் 15ம் திகதி முதல் தாய்

தாயில் சிறந்ததொரு கோவிலுமில்லை! தந்தை சொல்மிக்க மந்திரமில்லை!

ஆனல்

நானும் தங்கை காவேரியும் கடவுளை எம் தாயின் வடிவில் கண்டோம். கடவுளைத் தாய் உருவில் கண்ட நாம் மந்திரம் செபிக்க உதவியாக தந்தை சொல் கேட்க முடியவில்லை ஏன்? எப்படி? விளக்குகிறது.

சிவாஜி கணேசன் - ஜெயலலிதா

மேஜர் சுந்தரராஜன்,
எம். என். நம்பியார்,
எம். ஆர் ஆர். வாசு,
சி. கே. சரஸ்வதி, மனோரமா நடித்த—

# தாய்

---

இப்பொழுது காட்சியளிக்கிறது
## கெப்பிட்டல்

- வெள்ளிக்கிழமை விரதம் இருந்து நாகபூஜை செய்த தன் பலனுகத்தான் ஒரு கோடீஸ்வரனை கணவனுகப் பெறும் பாக்கியம் கிடைத்தது, என்ற நம்பிக்கையில் இருக்கும் ஒரு ஏழைப்பெண்!
- நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையில் நடக்கும் போராட்டம்!!
- பக்திக்கும் சக்திக்கும் இடையில் நிகழும் பலப்பரீட்சை!

நடிகர்கள்:
சிவகுமார்—சுந்தரராஜன்—நாகேஷ் — ஸ்ரீகாந்த்
சசிகுமார் —ஜெயசித்ரா—ஜெயசுதா
நடித்த

தேவரின்
## வெள்ளிக்கிழமை விரதம்
(ஈஸ்ட்மென் கலர்)

---

9வது வாரம் — பிளாஸா
சிவாஜி - மஞ்சுளா நடித்த
## எங்கள் தங்க ராஜா (கலர்)

5வது வாரம் — கிங்ஸ்லி
சிவாஜி - வாணிஸ்ரீ நடித்த
## வசந்தமாளிகை (கலர்)

15ம் திகதி வெள்ளி முதல்
லிடோ (யாழ்நகர்)
சிவாஜி - ஜெயலலிதா நடித்த
## தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வத்த, 194 ஏ. இலக்கத்தில் 1975-ம் வருடம் ஜூலை மாதம் 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.